www.eelamview.com

விடுதலைப்புலிகள்

வலுவான நிலையில் உள்ள... C5
என்னதான் நடக்கப் போகிறது? 03
பிச்சா பாத்திரத்துள்... 06
போகன் வில்... 04
போர்களமும் பெண்கள்... 08

குரல் – 114 மாசி – 2004 அன்பளிப்பு – 12/=

# ஏன்! இந்தப் பொதுத்தேர்தல் தமிழர்களுக்கு முக்கியமானது

**ஏப்ரல் 02ஆம் திகதி சிறிலங்கா நாடாளுமன்றிற்கான பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் வரலாற்றில், முதற்தடவையாக சிங்கள அரசு நாடாத்தும் பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்கொண்டு, தமிழ்மக்கள் தமது அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் மக்களாணையைப் பெற்றுத்தரும் தேர்தலாக மாற்ற முடிவெடுத்துள்ளனர்.**

எனினும், சிங்கள பௌத்த மேலாதிக்க சித்தாந்தத்தை வலியுறுத்தி, தமிழினத்தை அடக்கி - ஒடுக்கிவரும் சிறிலங்காவின் தற்போதைய அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு, தேர்தலில் நேரடியாகப் போட்டியிட புலிகள் இயக்கம் விரும்பவில்லை.

அதனால், புலிகள் இயக்கத்தின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு, புலிகளே தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகள் என்ற கொள்கையுடன் ஒன்றுபட்டுள்ள தமிழ்க் கட்சிகளின் இணைப்பான தமிழர் கூட்டமைப்பை, புலிகள் இயக்கம் இத்தேர்தலில் ஆதரிப்பதற்கு முடிவெடுத்துள்ளது.

தமிழர் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக 'வீடு' இடம்பெற்றுள்ளது. தமிழர் தாயகமான வடக்கு கிழக்கிலுள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ்க் கூட்டமைப்பு போட்டியிடுகின்றது.

தேர்தல் நாளன்று தத்தம் பகுதியிலுள்ள வாக்குச் சாவடிகளுக்குச் சென்று, தங்களது வாக்குரிமைகளைப் பயன்படுத்தி 'வீடு' சின்னத்திற்கெதிரே புள்ளடியிட்டு வாக்களிக்கும்படி தமிழ்மக்கள் அனைவரும் கேட்கப்படுகின்றனர்.

தேர்தல்களையே இதுவரை காலமும் நிராகரித்துவந்த புலிகள் இயக்கம் இந்தத் தேர்தலில் கலந்துகொண்டு வாக்களிக்குமாறு தமிழ்மக்களைக் கோருவது ஏன்?

தேர்தலை வென்று சிங்கள நாடாளுமன்றிலுள்ள சில ஆசனங்களைக் கைப்பற்றி அங்குபோய் அமர்ந்திருந்து அரசியல் பேசவேண்டும் என்ற ஆசையில்லை.

தமிழரின் உரிமைகளைப் பேசிப் பெறும் நியாயாதிக்க சபையாக சிங்கள நாடாளுமன்றமும் இல்லை. இது தமிழர் அனைவரும் அறிந்த உண்மை.

சிங்கள நாடாளுமன்றம் என்பது, சிங்களவரின் அரசியல் ஆதிக்கத்தை மட்டும் நிலைநிறுத்தும் வகையில் ஆக்கப்பட்ட அரசியல் அமைப்பால் நெறிப்படுத்தப்படும் ஒரு அதிகாரபீடம்.

அங்கே உள்ள தமிழ் முஸ்லீம் பிரதிநிதித்துவம் என்பது வெறும் ஒப்புக்குத்தான். அங்குள்ள தமிழ் முஸ்லீம் பிரதிநிதித்துவம் என்பது ஒன்றாகிநின்று - என்ன கூத்தாடினாலும் எடுபடாதவகையில் சிங்களப் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவமும் - பெரும்பான்மைச் சர்வாதிகாரமும் சிங்கள நாடாளுமன்றை இயக்குகின்றன.

எனவே, நாடாளுமன்ற அரசியல் வாயிலாக தமிழரின் அரசியல் உரிமைகளைப் பேசிப்பெறமுடியும் என்று புலிகள் இயக்கம் எப்போதும் நம்பியதில்லை.

ஆயினும், ஈழத்தமிழரின் இன்றைய அரசியல்நிலை வித்தியாசமானது.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று நடாத்திவரும் புலிகள் இயக்கம் தமிழினத்தின் இராணுவ பலத்தை, சிங்களத்தின் படைபலத்திற்கு இணையாகக் கொண்டுவந்து விட்டுள்ளது. இதனால், இலங்கைத்தீவின் இனங்களுக்கிடையேயான அரசியலும் சமபல நிலையை அடைந்துள்ளது. புலிகள் இயக்கம் வளர்த்துவிட்டுள்ள தமிழரின் வீரமும் அதற்கு அணிகலனாகவுள்ள ஆயுதபலமும், இரண்டையும் இணைத்து தமிழரின் அரசியல் இலட்சியத்தை எட்டமுயலும் அர்ப்பணிப்புணர்வும் ஒன்றிணைந்து ஈழத்தமிழரின் அரசியல் தளத்தை உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பலப்படுத்தியுள்ளது.

எனினும் இந்த அரசியல் பலத்தை ஜனநாயக ரீதியில் நிரூபித்துக் காட்டவேண்டிய

(தொடர்ச்சி 16ம் பக்கம்)



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# மக்கள் ஆணைமூலம் அரசியல்தீர்வுக்கு வலியுறுத்துவோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் வாயிலாக சிறிலங்காவின் புதிய ஆட்சியை சிங்கள மக்கள் தேர்வு செய்யப்போகின்றார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலைவிட இம்முறை புதியதொரு அரசியல் சூழலில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

கடந்தமுறை தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு போர் மூலமா! சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகவோ! என்று சிங்கள மக்களிடம் தீர்ப்புக்கேட்டு சிங்களத்தின் பிரதான கட்சிகள் இரண்டும் களம் இறங்கியிருந்தன.

சமாதானப் பேச்சுக்கு ஆணைவழங்கி சிங்களவாக்காளர்கள் தீர்ப்புக் கூறியிருந்தனர். ஆனால், அந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நீண்டதூரம் செல்ல ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அனுமதிக்கவில்லை.

நாடாளுமன்றைக் கலைத்து புதிய தேர்தலுக்கு அறிவிப்புச் செய்தார். ஆனால், ஆச்சரியப்படத்தக்க வகையில் அவரும் சமாதானத்திற்கான ஆணைகோரி இம்முறை நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்கின்றார்.

ஐ.தே.கட்சியினுடையதை 'பூடகமான சமாதானப் பேச்சு' என்று வர்ணிக்கும் அம்மையார், தங்களுடையதை வெளிப்படையான - அனைத்துத்தரப்பினரும் பங்குபற்றும் சமாதானப் பேச்சுக்கள் என்று வேறுபடுத்துகின்றார்.

அம்மையாரின் அரசியல் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஜே.வி.பி தீவிர இனவாதக்கட்சியாகும். தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அபிலாசைகளை சிறிதளவும் ஏற்றுக்கொள்ளாத பேரினவாதக் கட்சியாகும் தமது கூட்டணி ஆட்சிக்கு வந்தால் போர்நிறுத்தமும் இல்லை - சமாதானப்பேச்சுக்களும் இல்லை என்று பேசிவருகின்றனர். அத்துடன், சமாதானப் பேச்சிலிருந்து நோர்வேயை வெளியேற்றவேண்டும் என்று கூறிவருகின்றனர். மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவத்தை இவர்கள் நிராகரிக்கின்றனர்.

இந்த இனவாதக் கூட்டணி பதவிக்கு வந்தால் சமாதானப் பேச்சுக்கள் முறிந்துவிடும் என்றே உலகநாடுகள் அச்சம் கொண்டுள்ளன.

அம்மையாரின் சமாதான கோசத்தை தேர்தல் நாடகமாகவே பலரும் பார்க்கின்றனர். எனினும், புலிகள் இயக்கம் உறுதியான முடிவொன்றை எடுத்துள்ளது. சிங்கள மக்களால் தெரிவு செய்யப்படும் கட்சியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தயார் என்று அறிவித்துள்ளனர். உலகநாடுகளும் புலிகளின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன.

இதேவேளை,

இந்தத் தேர்தலை தமிழரின் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக புலிகள் இயக்கம் கருதுகின்றது.

தமிழரின் ஏகபிரதிநிதிகள் புலிகள் இயக்கம் தான் என்பதை வெளிப்படுத்தும் வகையில், தமிழ் மக்கள் ஒரு

விருதலைப் புலிகள் தமிழீழம்

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

குடையின் கீழ் அணிதிரண்டுள்ளனர். தமிழரின் ஐக்கியத்தைச் சிதடிக்கும் வகையில் பேரினவாதிகளின் கைக்கூலிகளாக செயற்படுவோரை மக்கள் நிராகரிக்க உறுதிபூண்டுள்ளனர்.

இம்முறை தமிழரின் வாக்களிப்பை சர்வதேச சமூகமும் உன்னிப்பாக அவதானித்துவருகின்றது. தமிழர் வழங்கப்போகின்ற மக்கள் ஆணையை முக்கிய விடயமாக எடுத்து சிங்கள ஆட்சியாளர்களுக்கு அரசியல் தீர்வுக்கான அழுத்தம் கொடுக்க சர்வதேச உலகம் தயாராகி வருகின்றது.

சர்வதேசத்தின் அக்கறைகளும் - இராஜதந்திர அழுத்தங்களும் கொழும்பை நோக்கித் திசைதிருப்பப்பட்டுள்ளன. வரலாற்றில் என்றுமில்லாத வகையில் சிங்கள அரசுமீது அழுத்தம் பிரயோகிக்கவும் - எச்சரிக்கைகளை விடவும் சர்வதேசம் முயல்கின்றது.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கட்டத்தில் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழர் கூட்டமைப்புக்கு வாக்களித்து புலிகளின் கரத்தைப் பலப்படுத்தவேண்டும். அதுவே சமாதானப்பேச்சைத் தொடர்செய்ய சிங்கள தேசத்திற்கு சர்வதேசம் கொடுக்க இருக்கும் அழுத்தத்திற்கு உந்துசக்தியாக திகழும். பேச்சுக்கள் உடனடியாகத் தொடங்கப்படுவதும் - அரசியல் தீர்வு விரைவுபடுத்தப்படவும் வேண்டியது அவசியமாகும்.

சிங்கள அரசின் காலம் கடத்தும் தந்திரோபாயத்தை புலிகள் இயக்கம் நீண்ட காலத்திற்கு பொறுமையுடன் சகித்துக்கொள்ளமாட்டார்கள்.

கடந்த இரண்டு வருடகால போர்நிறுத்தகாலத்தில் தமிழரின் அரசியல் அபிலாசைகளை அமைதிப்பேச்சு மூலம் வென்றெடுக்க புலிகள் இயக்கம் முயற்சிசெய்தது. இதற்காக எத்தனையோ விட்டுக்கொடுப்புக்களையும் - நெகிழ்வுப் போக்குகளையும் புலிகள் இயக்கம் வெளிப்படுத்தி வருகின்றனர். ஆயினும் சமாதான கால நன்மைகள் எதுவும் தமிழ் மக்களுக்கு பூரணமாகக் கிட்டவில்லை. போர்க்கால அகதிவாழ்வும் அது கொடுத்த அவலங்களும் சமாதானகாலத்திலும் அப்படியேதான் உள்ளன.

சிங்களத்தின் அரசியல் குழப்பங்களும் அரசியல் கட்சிகளிடையேயான ஒத்த கருத்தின்மையையும் காரணம் காட்டி தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை ஒத்திப்போடுவதைப் புலிகள் இயக்கம் இனியும் அனுமதிக்காது.

சர்வதேச சமூகமும் இந்த விடயத்தில் தமிழ்மக்களின் மன நிலையையும், புலிகளின் நிலைப்பாட்டையும் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைத்தீவின் இனமுரண்பாட்டை அமைதிவழியில் தீர்த்துவைக்கும் இறுதிச் சந்தர்ப்பமாக தேர்தலின் பின்வரும் அரசியல் சூழல் அமையவுள்ளது. இந்த அரிய வாய்ப்பை சிங்கள அரசு பயன்படுத்த தவறும் பட்சத்தில் தனியரசை நிறுவுமுயலும் புலிகளின் போராட்டம் தொடரும் என்ற அரசியல் உண்மையையும், சிங்கள அரசு உணர்ந்துகொள்ள வேண்டும்.



கதிரவன் சொரிந்திடும் வேளை
பனி தள்ளிச் சென்றது காலை
புலர்வது புது நாளென்றாகிலும்
ஆண்டொன்றின் ஆரம்பம்
அதுவென்றானது - எங்கள்
தேசத்தின் புத்தாண்டு
வண்ணமலர்களின் மடியிலே
பூத்தது

சோகம் நீங்கிய சோலைப் பறவைகள்
பாசம் தாங்கிடும் நினைவில் பறந்தன
மாசு நீங்கிய மனங்கள் எல்லாம்
தேச நாயகன் நினைவில் நிறைந்தன

வண்ணத்துப் பூச்சிகளிடம்
மலர்ச்சோலை வந்தது
தேன் சொரிந்தது
தென்பு கொடுத்தது
அன்பு தொடுத்து அரவணைத்தது

ஒளிகொடுத்த சூரியன்
ஒன்றாய்க் கலந்தான்
வழி கொடுத்த வள்ளல்
வாரி அணைத்தான்

நிழல் கொடுத்த விருட்சம்
நியமாய்க் குளிர்ந்தது
பசுமையிட்ட நிலம்
பயிராகிக் களித்தது

மலையொரு மோதும்
வலிமைத் தோள்கள்
மழலையின் மடியில்
மயங்கிச் சிலிர்த்தது

பகைவிழ ஆடிய வீரிய நெஞ்சம்
பாசத் தாயாய் பரிந்து கசிந்தது
முளை விரித்திடும் மலர்களின்
தந்தையாய் - உலகினை
வென்றிடும் மந்திரம் சொன்னது.

வாடியபோது நீர்கொடுத்த ஊற்று
மடியள்ளி இருத்திச் செடிகளிடம்
அடிமைகொள் வாழ்வில்லை இனி
விடிவெள்ளி வருமென்றுரைத்தது

சொந்தமில்லாக் குறைகளைந்து
சோகம் நீக்கியவன்
உறவிழந்தோர் எனும் நிலையை
உருக்குலைத்தவன்
வந்தமர்ந்து மலர்களிற்கு
வாசமூட்டினான் - நேசம்
காட்டினான் பாசம் கூட்டினான்

வரம் கொடுத்து வழிகாட்டும்
குருவொரு - கூடிக்
குதூகலித்தன குழந்தைகள்
துயர் துடைத்து - தலை
நிமிர்த்திய கரங்களின்
அணைப்பில் - துள்ளிக்
குதித்தன
தேசத்தின் சிற்பிகள்

வாழ்வென்ற சொல்லிற்கு
அர்த்தம் கொடுத்தவனிற்கு
அருகிருந்து அகமகிழ்ந்தன
ஆனந்தச் சிட்டுக்கள்
உறவொன்றைத் தந்த
உத்தமன் சிறகிற்குள்
சோலைக் குஞ்சுகள்
சுகம் கண்டது

யாரும் இல்லை என்று
யாரும் இல்லாது வாழ
வாழ்வின் பாதையிலே
கருகியாரும் வீழாது போக
காந்தளுடன் கனிவருந்தத்
நிலைவந்து நிழல்மடியில்
நிற்கின்ற சோலைகளாய்
அன்னை
அகராதியில் அழுத்தி எழுதப்பட
வேண்டிய சொல்லாய்
ஆக்கப்பட்டுவிட்டது.



## யாரும் இல்லை என்று யாரும் இல்லை



www.eelamview.com

www.eelamview.com



# என்னதான் நடக்கப்போகின்றது?

க.வே.பாலகுமாரன்

எந்தக் கோணத்திலிருந்து எப்படிப் பார்த்தாலும் எல்லா வகையாலும் எல்லா வகையிலும் மிக அபூர்வமானது இத்தேர்தல் சூழல். 1947ஆம் ஆண்டின் பின் இப்படியொரு தேர்தலை இத்தீவில் வாழும்மக்கள் சந்தித்திருக்கவில்லை. இத்



தேர்தலின் முடிவுகள் அவை எதுவாக இருந்தாலும் அதன்பின் நிகழப்போபவை எத்துணை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இப்பொதே ஊகிக்கமுடியுமா என்பது கேள்விக்குறிதான். இதனை ஓரளவு விளங்கிக் கொண்டமையால்தான் சருவதேசமும் இத்தேர்தலை வெகு உன்னிப்பாகக் கவனிக்க ஆயத்தமாகின்றது. அமைதிக்காக வாக்களியுங்கள் இன்றேல் அபிவிருத்திக்கான நிதியுதவி கிடையாது. தேர்தலை நீதியாக நடத்துங்கள் என வழமைக்கு மாறாக அறிவுறுத்தல்களை விடுக்கின்றது. ஒருவகைப் பதற்றத்தோடுதான் சருவதேசம் இதனை இன்று நோக்குகின்றது. சிறிலங்காவில் யாரை அழைப்பது என்று தெரியாமல் அண்மையில் வாசிங்டனில் நடத்தப்பட்ட நிதியுதவியாளர் மாநாட்டில் இப்பதற்றம் நிலவியதை எம்மால் உணரமுடிகின்றது.

எனவே இதுவொரு வழமையான தேர்தலல்ல என்பது தெளிவு. இலங்கையின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்கப்போகும் ஒரு தீர்ப்பாக இத்தேர்தல் நோக்கப்படுவதும் தெளிவு. எனவே எம்மக்களைப் பொறுத்த வரையில் இதுவொரு கையாளப்பட வேண்டிய பிரதானமானதொரு அரசியல் நிகழ்வு. எனவே இற்றைவரை தேர்தல்கள் குறித்து எவ்வித அக்கறையுமற்றிருந்தவர்கள், தேர்தல்கள் தமிழ்மக்களை மேலும் கீழ்நிலைக்கு இட்டுச்செல்வதை உணர்ந்ததால் அதனைப் புறக்கணித்தவர்கள் இம்முறை வேறுவிதமாகச் சிந்திக்கின்றனர். தடைகளை படிகளாக்கும் விடுதலைப் பயணத்தின் விதிக்கேற்ப இத்தேர்தலை தமக்குச் சாதகமாக்க முடிவெடுத்துவிட்டனர். தம்முன் நிகழும் அனைத்து அரசியல் நிலைமைகளை தமக்குச் சாதகமாக்க பயன்படுத்தும் ஆற்றல் இன்று எம் மக்களுக்கு வாய்த்துவிட்டது. இதற்கேற்பவே விடுதலைப்புலிகளும் நுண்ணியதொரு அரசியல் நகர்வினை மேற்கொள்ள ஆயத்தமாகிவிட்டனர்.

எனவே புலிகளும் புதியதொரு நிலைப்பாட்டினை அறிவித்துள்ளனர். "தமது அபிலாசைகளை கொள்கை ரீதியாக வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக இப்பொதுத்தேர்தலை மாற்றியமைக்கத் தமிழர் விரும்புகின்றனர். எந்த இலட்சியத்திற்காக, எந்த கொள்கைக்காக ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் தாங்கள் ஐக்கியப்பட்டு நிற்கின்றார்களோ அதை இம்முறை சருவதேச சமூகத்திற்கு நிலைநிறுத்தி நிரூபிக்கும் ஆயத்தப்பாட்டுடன் அவர்கள் இருக்கின்றார்கள். '(திரு. தமிழ்ச்செல்வன்)' சிங்கள மக்கள் இனவாத சக்திகளைப் புறந்தள்ளாவிடின் தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் நிலைவரும். சருவதேச சமூகத்தின் அனுசரணையுடன் ஆரம்பமான சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் அளவிற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் துணிந்துவிட்டார்கள். இதனை இவர்கள் சீர்குலைக்க முயன்றால் எமது தமிழ்த் தேசியம் காப்பாற்றப்படுவதற்கான முயற்சிகளை பூரணமாக தமிழ்மக்களை ஒன்றுபடுத்தி எமது தலைவர் முன்னெடுத்துச் செல்வார்." எனத் திரு.தமிழ்ச்செல்வன் தமிழ்மக்கள் சார்பில் மிகத்தெளிவான, நூற்றிற்குநூறு வெளிப்படையான செய்தியினை எமது சிங்கள சோதரர்க்கு அறிவித்துவிட்டார். "வரிகளுக்கிடையில் வாசித்தால்" இக் கூற்றிற்குள்ளே பொதிந்திருப்பது அதிர்வூட்டும், எச்சரிக்கை தரும், அறிவுறுத்தலிருப்பதை எவரும் புரிவர். எனவே வரும் தேர்தலை வெறுமனே தேர்தலாகப் பார்க்காமல் இத்தீவில் அமைதியை விரும்புவோர்க்கு வழங்கும் மக்கள் ஆணையாக பிரகடனப்படுத்துங்கள் என்பதே புலிகள் நிலைப்பாடாகின்றது.

இறுதியாக சிங்கள மக்களுக்கு சிங்களத் தரப்பில் என்ன கூறுகின்றது என்பதையும் பார்த்திடுவோம். சிங்களத்தில் இன்று காணப்படும் சோர்வுற்ற, கருமை படர்ந்த, தெளிவற்ற தம்மைத்தாமே நொகும் கழிவிரக்க சூழலை வார்த்தையில் வடித்தால் சண்டே ஐலண்டின் (15.12) தலையங்க வரியாகும். **"நாங்கள் உண்மையை உணர்வோம். இரண்டு கட்சிகளுமே எம்மை மிகமோசமாகக் கைவிட்டுவிட்டன.** எனவே அரசியல்வாதிகள் தேவர்கள்போல பேருந்து நிலையங்களில், சுவர்களில், விளம்பரங்களில் கைகூப்பி சிரிப்பதுகண்டு ஏமாறாதீர்கள். அடுத்த ஏழுவாரங்களுக்கு விழிப்புடனிருங்கள்." சரி இப்பொழுது ஐ.தே.கட்சியின் நிலை, எல்லா ஆயுதங்களையும் இழந்து அம்மணமாக, அழாக்குறையாக சிங்கள மக்களுக்குக் கூறுகின்றது. "போர்நிறுத்தம், அமைதியால் பயன்பெற்றவர் சிங்களவரே. தமிழரல்ல. அமைதி வயலில் விதைத்த அபிவிருத்திப் பயிர் வளர்ந்து அறுவடைக்குத் தயாராகும் பொழுது காய்ந்த மாடு கம்பில் விழுந்தது போல் கள்ளமாடுகள் புகுந்து பயிரை நாசம் செய்துவிட்டன. எனவே எம்மை மீண்டும் விதைக்க அனுமதி தாருங்கள்" (ஆனால் வயலை ஏன் காக்கவில்லை? காவற்கடமை ஏன் புரியவில்லை? என்ற கேள்விக்கு விடைசொல்ல ரணிலால் முடியாது) அம்மையார் சொல்கிறார், "ஐ.தே. கட்சியால் அமைதி வயலில் அபிவிருத்திப் பயிரை விதைக்கமுடியாது. அதனை நானே திரும்பச் செய்வேன். எனக்கு அனுமதி தாருங்கள், நல்லமுறையில் செய்து காட்டுவேன்" என்கிறார். இதன்மூலம் சிங்கள வாக்காளர்க்கு ஒரு மறைமுக எச்சரிக்கையை அவர் விடுக்கின்றார். இம்முறையும் நீங்கள் ரணிலை தெரிவுசெய்தால் பழைய கதைதான் திரும்ப நடக்கும் என்பதுதான் அது. ஏற்கெனவே புலிகளோடான பேச்சு, அவர்களோடான போர்நிறுத்தம், நோர்வே அனுசரணை என்பவை பற்றி ஜே.வி.பி கூறுபவற்றினை குழப்பத்துடன் நோக்கும் சிங்கள மக்களுக்கு இப்பொழுது மேலும் குழப்பமே அதிகரிக்கின்றது.

இந்நிலையில் அவர்கள் முன் இன்னொரு மாற்றுக்குரல் மிகப் பலவீனமாக ஆனால் தெளிவோடு ஒலிக்கின்றது. சுதந்திரக் கட்சியோடு கூட்டுவைத்து அதற்கு இரையாகிப்போன வலது(?)குறைந்த இடதுகளின் மீதமான நல்லோர் சிலர் கூறுகின்றனர். "சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டென்பது, ஒரு காட்டு மிராண்டித்தனமான இனவாதக் கும்பல், ரணில் தலைமையிலான கூட்டு அமெரிக்க கைப்பொம்மை, ஜே.வி.பிக்கும் சிகல உறுமயவிற்கும் எந்த வேறுபாடும் கிடையாது. எனவே நாட்டைக் காப்பாற்றி அமைதி முயற்சிகளை சமாதான வழியில் முன்னெடுக்க மக்கள் சக்தியொன்றினை புதிய அணிக்கூடாகக் கட்டியெழுப்பவேண்டும்" இங்குள்ள சிக்கல் என்பது யாரிந்தப் புதிய அணி என்பதே? விக்கிரமபாகு, வாசுதேவ கூட்டா? ஆனால் சிங்கள வாக்காளர் இப்படியான அணிகளை எப்போதுமே ஒரு பொருட்டாகக் கருதியவரல்லர். இதற்குச் சிங்கள மக்களைக் குறைசொல்ல முடியாது. இடதுசாரிகள் என்றாலே சிங்கள மக்களுக்கு ஒவ்வாமை ஏற்பட இவர்களே காரணமென்பது ஊரறிந்த உண்மை.

இப்போது நேரடியாக விடயத்திற்கு வந்துவிட்டோம். எல்லாருமே சிங்களத் தரப்பிற்கு போதிய கால இடைவெளி - சிந்திப்பதற்குக் கொடுத்து அவர்கள் என்ன செய்ய வேண்டுமென கூறியாகிவிட்டது. இப்போது செயற்படவேண்டியது சிங்கள மக்கள் முறை. **ஆனால் பாவம்-அவர்கள் என்ன செய்வார்கள்?** யாரந்த அமைதியை விரும்புகிற, நாட்டு நலனை முன்னிலைப்படுத்துகிற தலைமைத்துவ ஆளுமையுள்ள அணி? அது எங்கேயிருக்கின்றது? இம்முறை முதன்முறையாக சிங்கள மக்களுக்கு தெரிவிற்கே இடமில்லாமல் போய்விட்டது. ஒரு மிகச்சிறிய வேறுபாட்டைத் தன்னும் பெரிதாகக் கட்சிகளிடையே காணமுடியவில்லை. எல்லாமே ஒரே நேர்கோட்டில் வந்துவிட்டன. (இது தமிழ் வீரத்தின் மாவீரத்தின் மாண்பு அதன் மௌனப்புரட்சியின் விளைவென்பது எம் பெருமை) ஊழலா - நேர்மையா? கொள்கையா - சந்தர்ப்பவாதமா? முற்போக்கா - பிற்போக்கா? கூடிய பேரினவாதமா - குறைந்த பேரினவாதமா? அமைதியா - போரா? வேறுபாடுகளற்று கட்சிகள் வேறுபட்டு நிற்கின்றன. தெரிவிற்கு இடமற்ற தெரிவு. இந்நிலைமையில் ஆளுமையுள்ள தலைமையைக்கொண்ட அணியையாவது இனம்காணும் வாய்ப்பும் சிங்களத்தில் இல்லை. அப்படியான தலைமை சிங்களத்திற்கு வாய்ப்பதில்லை. இப்படியான வெற்றிடத்தை ஜே.வி.பியின் நந்தனக்களும் விமல்களும், சிகல உறுமயவின் சம்பிக்காக்களும் நிரப்ப முயல்வதை நாம் காண்கின்றோம். ஒருமுறைக்கு நூறுமுறை சிந்தித்தாலும் சிங்கள மக்களுக்கு பெரும் குழப்பமே மிஞ்சும்.

இப்படியான நிலையில் என்னதான் முடிவு? என்னதான் நடக்கப்போகின்றது இத்தீவில்? மிகவும் உறுதியற்ற நிச்சயமற்ற ஒரு எதிர்காலத்தையே சிங்கள மக்கள் எப்படி வாக்களித்தாலும் உருவாக்கப் போகின்றார்கள். ரணிலின் அமைதி வயலில் பாய்ந்த கள்ளமாடுகள் என சிங்கள மக்கள் நினைத்தால் - அல்லது கள்ள மாடுகள் விழுவதைத் தடுக்க முடியாதவனுக்கு வயல் எதற்கு என நினைத்தால்?



அனுதாபம் கருதி ஆகக் குறைந்தளவு பெரும்பான்மையோடு ரணிலையும் அல்லது அதிகாரம் கருதி அம்மையாரின் கும்பலையும் மிகக் குறைந்தளவு பெரும்பான்மையோடுதான் சிங்கள மக்கள் ஆட்சியமைக்க அனுமதிப்பர். தெரிவற்ற நிலையில் இப்படியுமொரு தெரிவு!? என எத்தனைதான் வினா, வியப்புக் குறிகளை நாமிட்டாலும் விளங்காத விளக்கமிது. பொதுவில் அம்மையாரின் குழுவே அரசாங்கம் அமைக்க வாய்ப்பிருப்பதாக கருதப்படுகின்றது. அப்படியானால் தமிழ்மக்களை வதைத்த அனைத்து சிங்கள அரசுகளின் சார்பாகவும் பண்டா குடும்பத்தின் பாவங்களுக்கு பொறுப்பாகவும் அம்மையாரே வரலாறு வழங்கப்போகும் வலிய தண்டனையை ஏற்கநேரிடும். எவர் பதவிக்கு வந்தாலும் அவர் தலைக்குமேல் "டமோக்கிளிசிற்கு" மேல் மயிரிழையில் கட்டப்பட்ட வாளை

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

இதுவொரு வழமையான தேர்தலல்ல என்பது தெளிவு. இலங்கையின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்கப்போகும் ஒரு தீர்ப்பாக இத்தேர்தல் நோக்கப்படுவதும் தெளிவு. எனவே எம்மக்களைப் பொறுத்தவரையில் இதுவொரு கையாளப்படவேண்டிய பிரதானமானதொரு அரசியல் நிகழ்வு. எனவே இற்றைவரை தேர்தல்கள் குறித்து எவ்வித அக்கறையுமற்றிருந்தவர்கள், தேர்தல்கள் தமிழ்மக்களை மேலும் கீழ்நிலைக்கு இட்டுச் செல்வதை உணர்ந்ததால் அதனைப் புறக்கணித்தவர்கள் இம்முறை வேறுவிதமாகச் சிந்திக்கின்றனர். துடைகளைப் படிகளாக்கும் விடுதலைப் பயணத்தின் விதிக்கேற்ப இத்தேர்தலை தமக்குச் சாதகமாக்க முடிவெடுத்துவிட்டனர். தம்முன் நிகழும் அனைத்து அரசியல் நிலைமைகளை தமக்கு சாதகமாக்கப் பயன்படுத்தும் ஆற்றல் இன்று எம்மக்களுக்கு வாய்த்துவிட்டது.



www.eelamview.com

**யாராவது எனது மண்ணை பறிக்கவிரும்பினால் நான் அந்த மண்ணை அவர்கள் பெறக்கூடாது என்று நினைத்தால், ஒன்றில் அவன் என்னைக் கொல்ல வேண்டும், அல்லது நான் அவனைக் கொல்ல வேண்டும்.**

போகன்வீலின் இளம் தலைவர் ரபாயேல் பெலி

*( போகன்வீல் நிலப்பிரச்சினை. பக்29. 1969)*

# போகன் வீல்



# தொடரும் விடுதலைப் போராட்டம்

1768ஆம் ஆண்டின் அந்த சூழ்வளி செறிந்த நாளில் தனது கப்பல் தளத்தில் நின்றபடி தொலைக்காட்டிக் கூடாக பார்த்த பிரெஞ்சு ஆய்வுப் பயண வாளரான கப்டன் லூயி அன்ரன் டி போகன் வீல் அந்த தீவைக் கண்டபோது, அங்கு வாழும் பெரும்பாலும் மெலானேசியர்களை கொண்ட சுதேசிய மக்களுக்கு இவ்வளவு துன்பத்தை விளைவிக்க மூலகாரணராக நான் இருக்கப்போகிறோம் என்று அவர் கனவிலும் நினைத்திருக்கமாட்டார். தான் கண்ட தீவுக்கு தனது பெயரையே சூட்டி மகிழ்ந்தார். ஆனால் அந்தத் தீவில் காணப்படும் இயற்கையான மூலவளங்கள் காரணமாக அந்த மண்ணின் மைந்தர்கள் இன்று சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கும் முயற்சியில் தங்கள் மக்கள் தொகையில் கால்பங்கினரை ஒடுக்குமுறைக்கு பலிகொடுத்து விட்டு இன்னமும் அல்லாடிக் கொண்டிருக் கின்றார்கள்.

உலகப்படத்தில், அவுஸ்திரேலியாவுக்கு மேலே இரைதேடும் கழுகுபோல் குந்திக்கொண்டிருக்கும் பப்புவா நியுகினியாவுக்கும் சொலமன் தீவுகளுக்குமிடையே பப்புவா நியூ கினியாவில் இருந்து 500கி.மீ தூரத்தில் ஆனால் சொலமன்தீவுக் கூட்டத்திலிருந்து வெறுமனே 8கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்திருக்கும் போகன்வீல், புவியியல் ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் சொலமன் தீவுக்கூட்டங்களுக்கே சொந்தமாக இருக்கவேண்டும். ஆனால் 500கி.மீ தூரதிலிருக்கும் பப்புவா நியூ கினியாவின் ஒடுக்கு முறைக்குள் எப்படி வரநேர்ந்தது என்பது 1768இல் ஆரம்பித்து இன்றுவரையான 236 ஆண்டு காலம் நீடித்திருக்கின்ற ஒரு சோகக்கதையாகும்.

தாய்வழி முதுசு மரபு (MATRILINEAL) பேணும் இந்த தீவைப்பற்றிய சில விபரங்களை முதலில் பார்ப்போம்.

அண்ணளவாக 200கி.மீ நீளமும் 40கி.மீ அகலமும் உடையது இந்தத்தீவு. இதில் பலதீவுகள் அடங்கியுள்ளன. இவற்றுள் போகன்வீல் பெருநிலப்பரப்புத்தான் ஆகப்பெரிய தீவாகும். அதற்கு வடக்கேயுள்ள பூக்கா (BUKA) தீவு ஒடுங்கிய நீரிணை ஒன்றால் பிரிக்கப்பட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட இரண்டிலட்சம் சனத்தொகையினரில் பெரும்பான்மையினரான மெலானேசியர்கள் (MELANESIANS) மத்திய மற்றும் தென் பகுதியிலும், அஸ்ரோனேசியர்கள் (AUSTRONESIANS) கரையோரங்களிலும் வடபுலத்து உள்பகுதிகளிலும் வாழ சிலசிறிய தீவுகளில் பொலினேசியர்களும் (POLYNESIANS) மைக்ரோனேசியன்களும் (MICRONESIANS) வாழ்கின்றனர். பதினைந்து வகையான மொழிக் குழுமங்கள் இத்தீவுகளில் உள்ளன.

அரசியல் ரீதியாக பப்புவா நியுகினியாவின் ஆட்சிக்கு போகன்வீல் உட்பட்டிருப்பது குடியேற்றவாத வரலாறொன்றின் விளைவாகும். "பூ னைக்கண்ணன், புகைக்கண்ணன் ஆண்டபின்..." என்றவாறான கதை இங்கும் நிகழ்ந்தது. 1768இல் கப்டன் போகன்வீல் கண்டுபிடித்த இத்தீவை 1898இல் ஜேர்மானியர் தம்வசமாக்கிக் கொண்டனர். வல்லரசுகளுக்கிடையேயான அதிகார கைமாறல்களிலே சுதேசிய மக்களின் ஒப்புதல் பற்றி எவரும் எந்தக் கவலையும்படவில்லை.

1899ம் ஆண்டில் ஜேர்மனிக்கும் பிரித்தானியாவுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி போகன்வீல் தீவானது, சொலமன் தீவுக்கூட்டங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஜேர்மனிக்கு வழங்கப்பட்டது. இதற்கு போகன்வீல் மக்கள் காட்டிய எதிர்ப்புக்கு எந்தப்பயனும் இருக்கவில்லை.

1ம் உலகப்போரில் ஜேர்மனி தோல்வியுற்றதை தொடர்ந்து 1914ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா இத்தீவுகளை கைப்பற்றிக்கொண்டது. 1920ஆம் ஆண்டில் ஐ.நா. ஆணையொன்றின்படி தற்போது பப்புவா நியுகினியா என்று அழைக்கப்படும் பகுதி அவுஸ்திரேலியாவின் ஆட்சியின்கீழ் வந்தது. 1942 மார்ச் மாதத்தில் ஜப்பானியர்கள் போகன்வீலை ஆக்கிரமித்துக்கொண்டனர். இரண்டாம் உலகப்போரின் போது உக்கிரமான சண்டைகள் இடம்பெற்ற இடங்களில் ஒன்றாக போகன்வீலும் இருக்கிறது.

1943 மே மாதத்தில், பேர்ள்ஹாபர் தாக்குதலின் சூத்திரதாரியான ஜப்பானிய தளபதி இஸ்றுகு யாமமோட்டோவின் விமானம், போகன்வீல் வான்பரப்பில் வைத்துச் சுட்டுவீழ்த்தப்பட, அவர் கொல்லப்பட்டார். 1944ஆம் ஆண்டில் அமெரிக்க மரீன்கள் இங்கு தரையிறங்கி அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். 2ஆம் உலகப்போருக்குப்பின் மீண்டும் அவுஸ்திரேலியாவின் நிர்வாகத்தின்கீழ் போகன்வீல் வந்தது.

1968ஆம் ஆண்டில் பப்புவா நியுகினியா எங்கும் தேர்தல் நடத்தப்பட்டது. போகன்வீல் மக்கள் பிரிந்துசெல்வதற்கான கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தும்படி கோரினார்கள். பப்புவா நியுகினியா அரச(PNG) அதற்குச் செவிசாய்க்கவில்லை. 1973 டிசம்பர் மாதத்தில் பப்புவா நியுகினியாவுக்கு சுயாட்சி அதிகாரமும் 1975 செப்ரெம்பரில் முழுமையான சுதந்திரமும் வழங்கப்பட்டது. பப்புவா நியுகினியா சுதந்திரம் பெறுவதற்கு இருவாரங்களுக்கு முன்னதாக பப்புவா நியுகினியாவிலிருந்து பிரிந்து போகும் தமது விருப்பத்தை வலியுறுத்தும் விதத்தில், போகன்வீல் மக்கள் ஒருதலைப்பட்சமான சுதந்திரப்பிரகடனம் (UNILATERAL DECLARATION OF INDEPENDANCE - UDI) செய்தனர். ஐக்கிய நாடுகள் சபைக்கு போகன்வீல் செய்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஒருவருடத்துக்குப் பின்பு PNGயுடன் செய்துகொண்ட சமரச ஒப்பந்தத்தின்படி போகன்வீலுக்கு பப்புவா நியுகினியாவின் மாகாணம் என்ற வகையிலான மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி வழங்கப்பட்டது.

ஆனால் இப்பேச்சு வார்த்தைகளில் பங்கு கொண்டவர்கள் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும்




வகையில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்டவர்களாக இருக்கவில்லை என பலரும் குறைப்பட்டிக்கொள்கிறார்கள்.

போகன்வீல் மக்களின் சுதந்திரவேட்கையை பப்புவா நியுகினியா இலகுவில் ஏற்றுக்கொள்ளாததற்கு வலுவான காரணம் ஒன்று இருக்கிறது. 1960ஆம் ஆண்டிலே அவுஸ்திரேலிய நில ஆய்வாளர்கள் போகன்வீலில் செப்புப்படிவுகள் இருப்பதை கண்டுகொண்டனர். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உலகிலேயே மிகப்பெரிய செப்பு - தங்க - படிவுகள் இங்கு இருப்பது மெய்ப்பிக்கப்பட்டது. இந்த வளங்களை சுரண்டுவென அழைக்கப்பட்ட "போகன்வீல் கொப்பர" என்ற நிறுவனத்தின் ஐம்பத்து மூன்று வீதபங்குகள் அவுஸ்திரேலிய நிறுவனமான றியோரின்ரோ அல்லது CRA இன்வசம் இருக்கின்றன. இருபது வீதமான பங்குகள் PNG அரசிடம் இருக்கின்றன. போகன்வீல் மக்களுக்கு எந்தப்பங்கும் இல்லை. இந்த வளங்கள் மூலமான வருமானங்களின் எவையும் போகன்வீல் மக்களின் நலன்களைப் பேணுவதற்காகச் செலவழிக்கப்படவில்லை. மாறாக இத்தீவின் காட்டுப்பகுதிகளில் ஆறு கிலோமீற்றர் நீளமும் நான்கு கிலோமீற்றர் அகலமும் அரைக் கிலோமீற்றர் ஆழமும் கொண்ட பகுதியில் அகழ்வுகள் இடம்பெற்றதில் நாசமாக்கப்பட்ட நிலப்பகுதிகள் இந்த மக்களுக்குரியதெனினும் அவற்றிலிருந்து எந்தப்பயனும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களின் முன்னோர்களுடனும் அவர்களின் அடையாளத்தோடும் இருந்த பிணைப்பான இந்த நிலங்கள் சுரண்டப்பட்டன. அவர்கள் சீவனோபாய பயிரிடு தலை செய்துவந்த நிலங்கள்மீது ஏற்படக் கூடிய சூழல் பாதிப்புக்கள் பற்றி எந்த அக்கறையும் செலுத்தப்படவில்லை.

உண்மையைச் சொல்லப்போனால் 1969 - 1988 வரையான காலப்பகுதியில், பப்புவா நியுகினியா அரசின் பிரதான வருமான மூலமாக போகன்வீலின் பண்குணா (PAN GUNA) செப்பு மற்றும் தங்கச் சுரங்கமே இருந்தது.

1969இல் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வு வேலைகள் எண்ணூறு போகன்வீல் குடும்பத்தவர்களை நிலமற்றவர்களாகவும் ஆயிரத்துநானூறு குடும்பத்தவர்களை மீன்பிடி உரிமைகள் அற்றவர்களாகவும் ஆக்கிவிட்டது. இருநூற்றி இருபது ஹெக்ரேர் அளவிலான பண்குணாவின் காடுகள் நச்சூட்டப் பட்டு வெட்டி வீழ்த்தப்பட்டு




எரிக்கப்பட்டு, அந்தப்பகுதிகளின் செழிப்பான மேற்பரப்பு மண்ணுடன் புல்டோசர்கள் மூலம் நதிக்குள் தள்ளிவிடப்பட்டு நதியும் தூர்க்கப்பட்டது. ஒரு பில்லியன் தொன்கள் அளவான நச்சுத்தன்மைவாய்ந்த கனிப்பொருட்கழிவுகள் (TAILINGS) காவரோங் (KAWERONG) நதியினுள் தள்ளிவிடப்பட்டு ஜாபா (JABA) நதிவழியாக கடற்கரைவரை கடத்தப்பட்டன. இது 35கி.மீ நீளமான மரணச்சுவடு ஒன்றை வரைந்து சென்றது. நதியிலிருந்து மீன்கள் சீழ்ப் புண்கள் ஏற்பட்டு இறந்துபோயின. பறவைகள், பழம் உண்ணும் வௌவால் வகைகள், (செத்ததுபோல் நடித்து எதிரியிடமிருந்து தப்பும் பழக்கம் கொண்ட) பைம்மா இன விலங்குகள் (POSSUMS) அனைத்தும் அடியோடு மடிந்து போயின. கழிமுகங்கள் அடைபட்டுவிட்ட ஜாபா நதிக்கரைகளை மேவிப்பாய்ந்து, அருகே இருந்த சமவெளிகளை நச்சியல்பான சதுப்பு நிலங்களாக அடித்துவிட்டது. ஒருநாள் காலையில் விழித்தெழுந்த போகன்வீல் மக்கள், முதல் நாளிரவு ஆக்கப்பட்ட சட்டத்தின்படி மூன்றடி ஆழமான மண் மட்டுமே தங்களுக்குச் சொந்தமாயிருக்கும் என்பதை அறிந்து திடுக்குற்றனர். மூன்றடிக்கு கீழே உள்ளவை "முடிக்குரியவை" ஆக அச்சட்டம் கூறியது.

தாய்வழி முதுசு பாரம்பரியத்தால் பெரும்பாலும் பெண்களாக இருந்த நில உரிமையாளர்கள் ஆரம்பத்திலிருந்தே அகழ்வு வேலைகளுக்கு எதிர்ப்புக் காட்டினார்கள். முன்னேறிவந்த புல்டோசர்களுக்கு முன்னால் தங்கள் குழந்தைகளை மார்போடு அணைத்தபடி படுத்துக்கொண்டார்கள். குண்டாந்தடிகளையும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் தாங்கிவந்த கலகமடக்கும் பொலிசார் ஈவிரக்கமின்றி அவர்களை விரட்டியடித்தனர். அவுஸ் திரேலிய உயர்நீதிமன்றத்தினூடாக சுரங்க வேலையை நிறுத்த எடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

முன்னெப்போதுமில்லாத விதத்திலே தங்கள் வாழ்க்கை முறையும் சூழலும் குழப்பப்பட்டதற்கான இழப்பீடுகள் எதுவும் இந்த மக்களுக்குக்கிட்டவில்லை. அகழ்வுகளில் இருந்து கிடைத்த உரிமக் கொடுப்பனவுகளை எல்லாவற்றையும்PNG அரசே வைத்துக் கொண்டது.

சிறிதுசிறிதாக அதிகரித்த இந்தப் பதட்டங்கள் 1988 அளவில் வன்செயலாக மாறின. மரபு நிலச்சொந்தக்காரர்கள் தங்களை பிரான்சிஸ் ஓனா (FRANCIS ONA) என்பவரின் தலைமையில் ஒழுங்கமைத்துக்கொண்டு, சுரங்கங்களுக்கு மின்சக்தி வழங்கிவந்த மின் கோபுரங்களை தகர்ப்பதன் மூலம் சுரங்கங்களை பலவந்தமாக மூடிவிட்டு. ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தம்முடனேயே நிகழ்த்தப்படவேண்டும் என அறிவித்தனர். பின்னர் இந்த அமைப்பினர் போகன்வீல் புரட்சிகர இராணுவம் (BRA) என்று அழைக்கப்பட்டனர். கலகமடக்கும் பொலிசாரை அனுப்பி PNG அரசு மேற்கொண்ட பதிலடி நடவடிக்கைகளை தடிகள், கட்டிகள், தாங்கள் கைப்பற்றிய ஆயுதங்கள், காட்டிலுள்ள தற்காலிக தொழிற்சாலைகளில் உருவாக்கிய ஆயுதங்கள், 2ஆம் உலகப்போர் முடிவில் ஜப்பானிய, அமெரிக்க இராணுவத்தினர் விட்டுச்சென்ற எச்சங்களான ஆயுதங்களைக் கொண்டு எதிர்கொண்டு, போகன்வீல் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர். சுதந்திரத்துக்கான கெரில்லா போரையும் ஆரம்பித்தனர்.

போகன்வீலின் மக்களது எழுச்சியும் அவர்கள் நடத்திய விடுதலைப்போரும் உயர்கல்வி கற்ற போகன்வீல் பிரசைகளை கவர்ந்து இழுத்தது. தற்சார்பு - கிராம அடிப்படையிலான கல்வி அமைப்பை உருவாக்குவதற்கு இவர்கள் தாங்கள் கற்ற உயர்கல்வியை பிரயோகித்தார்கள். அத்தோடு PNG அரசியல் முறைமையினுள்ளேயே உள்ளக சுயாட்சி உருவாக்குவதில் வழிகாட்டுபவர்களாக திகழ்ந்தார்கள்.

உலகெங்கும் போராட்டம் நடக்கும் இடங்களில் நிகழ்வது போலவே, PNG ஆயுதப்படையினர் பெருமளவில் போகன்வீலில் இறக்கப்பட்டனர். பப்புவா நியுகினியாவுக்கு அவுஸ்திரேலியா நிதி உதவிகளையும் உபகரணங்கள் மற்றும் பயிற்சிகளையும் வழங்கியது. போகன்வீலில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அங்குவந்து இறங்கிய ஆயுதப்படையினர் சிவிலியன்களை சுற்றி வளைத்துப் பிடித்து "நலன்புரி மையங்கள்" இல் அடைத்தனர். PNG அரசு மாகாண அரசை பதவி நீக்கியது. நில உரிமையாளர்களால் உருவாக்கப்பட்ட போகன்வீல் புரட்சிகர இராணுவம், போகன்வீல் மக்களின் உரிமைக்குரலாக நீளெங்கும் பரந்து கொண்டது.

1989ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக சுதந்திரப்பிரகடனம் செய்த BRA, தனது இறுப்பீட்டுக் கோரிக்கையை, PNG இடமிருந்து தமது இறைமையை பெறுவதையும் உள்ளடக்கி விரிவுபடுத்திக்கொண்டது. இதற்கு எதிரடவடிக்கையாக வான் மற்றும் கடல்வழி தடைகளை இறுக்கிய PNG, மனிதநேய உதவிகள் மக்களை சென்றடைவதையும் தடுத்துவிட்டது. இதன்விளைவாக 30,000-50,000 மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பீடுகள் கூறுகின்றன.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)





www.eelamview.com

www.eelamview.com



# வலுவான நிலையிலுள்ள தமிழ்த் தேசியத்திற்கு தேர்தல்மூலம் மேலும் பலம் சேர்ப்போம்



**எல்லாளன்**

***சிங்களதேசம்*** முழு அளவில் தேர்தல் பரப்புரைகளில் மூழ்கிவிட்டது. காலம் கனியமுன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை அறிவித்த சந்திரிகா அம்மையாரின் முடிவை உலகம் வரவேற்கவில்லை. அத்துடன், தீவிர இனவாத மற்றும் வெளிநாட்டு எதிர்ப்புச் சக்திகளான ஜே.வி.பியினருடன் அம்மையார் அமைத்துக்கொண்ட அரசியல் கூட்டணியை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை. இந்தக் கூட்டுமுன்னணி பதவிக்கு வந்தால் சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்படும் என அவை அஞ்சுகின்றன. அத்துடன் பொருண்மியத் துறையில் பாரிய குழப்பங்களும் - பின்னடைவுகளும் ஏற்படும் என்றும் அவை கவலையடைகின்றன. இதனால் வாக்களிப்பு நடைபெற முன்னரே சிங்களக் கட்சிகளுக்கு எச்சரிக்கை கலந்த வேண்டுகோள்களை சர்வதேச நாடுகள் விடுத்துவருகின்றன. போர்நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் விதமாகவோ அல்லது சமாதானப் பேச்சுக்களைக் குழப்பியடிக்கும் வகையிலோ பிரச்சாரங்கள் மேற்கொள்ளக்கூடாது என அவை அறிக்கைகள் விட்டுள்ளன. பதவியேற்கவுள்ள புதிய அரசாங்கம் சமாதானப் பேச்சைத் தொடரவேண்டும் என்றும் இப்போதே, கோரிவருகின்றன.

சமாதானத்திற்கான தடைக்கல் சிங்களக்கட்சிகள் பக்கத்திலேயே உள்ளது என்ற உண்மையை சர்வதேச சமூகம் இப்போது முற்றாக ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த இரண்டு வருட கால அமைதிச்சூழல் சர்வதேசத்திற்குப் பல உண்மைகளை உணர்த்தியுள்ளது.

'சமாதானத்தின் எதிரிகள்', ஜனநாயக விரோதிகள் என்றவாறாக புலிகள் இயக்கம்மீது இதுவரை காலமும் சுமத்தப்பட்டுவந்த அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் இப்போது அர்த்தமிழந்துவிட்டன. சமாதான முயற்சியில் புலிகள் இயக்கம் காட்டிய தீவிர ஈடுபாடும் - நேர்மையான அணுகுமுறையும் - யதார்த்தமான நிலைப்பாடுகளும் புலிகள் இயக்கத்திற்கு நற்பெயரைத் தேடிக்கொடுத்துள்ளன. சமாதானத்திற்கு ஆபத்து வந்தபோது புலிகள் இயக்கம் வெளிப்படுத்திய பொறுப்புணர்ச்சியும் - பொறுமையும் புலிகளுக்குச் சில அரசியல் அனுகூலங்களை ஏற்படுத்தியுள்ளன. சமாதானத்தின் எதிரிகளும் - ஜனநாயக விரோதிகளும் சிங்களத்து அரசியல் அரங்கிலேயே உள்ளனர் என்ற நீண்டகால உண்மையை சர்வதேசம் விளங்கிக்கொள்ள இந்த இரண்டுவருட சமாதான அரசியல் உதவியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. இந்தக் காலப்பகுதியில் தமிழ்மக்கள் பெரிதாக எந்த நன்மையையும் பெற்றுவிடவில்லை. தமிழர் நிலத்தில் புனர்வாழ்வும் இல்லை, அபிவிருத்தியும் இல்லை, பொருள் உதவியும் இல்லை. ஆனால், இந்த இரண்டுவருட காலத்தில் புலிகள் இயக்கம் நடாத்திவரும் வெற்றிகரமான அரசியல் - இராஜதந்திர நடவடிக்கைகளால் தமிழினம் மாபெரும் நன்மை ஒன்றை அடைந்துள்ளது. அது வேறொன்றுமல்ல, எமது மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு தற்போது கிடைத்துவரும் உலகளாவிய தார்மீக ஆதரவாகும். அத்துடன், உத்தியோகப் பற்றற்றவகையில் புலிகள் இயக்கத்திற்குக் கிடைத்துவரும் உலக அங்கீகாரமும் தமிழரின் அரசியல் பலத்தை அதிகரிக்கச் செய்கின்றன. சர்வதேச சமூகத்தின் அரசியல் அங்கீகாரமும் - தார்மீக ஆதரவும் தமிழர்க்குச் சார்பாகத் திரும்பியுள்ளது என்று சிங்களப் பத்திரிகைகளே ஆதங்கப்படும் அளவுக்கு அரசியல் நிலைமை மாற்றமடைந்து வருகின்றது.



புலிகள் இயக்கத்திற்கு எதிராக கடந்தகாலத்தில் எத்தனையோ குற்றச்சாட்டுக்களை அள்ளி இறைத்து வந்த சிங்கள அரசு இப்போது சாட்டுக்கள் எதுவுமில்லாமல் வெறுங்கையுடன் நிற்கின்றது. புலிகளை நோக்கி நீட்டிய சுட்டுவிரலை எடுக்க மறுத்து வந்த சர்வதேச சமூகம் இப்போது சிங்கள தேசத்தை நோக்கி தனது சுட்டுவிரலைக் குறிவைத்து - எச்சரிக்கைகளையும், கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் விடுத்து வருகின்றது.

சமாதான வேடம்பூண்டு போர் முரசு கொட்டிவந்த சந்திரிகா அம்மையாரின் முகமூடி விரைவில் சர்வதேசத்தின் முன்னால் கிழித்தெறியப்படும் என்று முன்னர் புலிகள் இயக்கம் கூறி வந்தது. இன்று அது நடைபெற்றுவிட்டது. சமாதான தேவதை என்றும் -'இனவரம்பு கடந்த பல்லினத் தலைவி' என்றும் அழைத்துவந்த சர்வதேச ஊடகங்கள் இப்போது அவரை இலங்கை அரசியலிலுள்ள 'கெட்ட ஆள்' (Bad gay) என்று வர்ணிக்கத் தலைப்படுகின்றன. இனவாதிகளான ஜே.வி.பியினருடன் அவர் வைத்துக்கொண்ட கெட்ட அரசியல்கூட்டு அம்மையாரின் சுயரூபத்தை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. இலங்கை அரசியலில் குழப்பத்தையும் - அரசியல் உறுதியற்ற நிலையையும் உண்டுபண்ணக்கூடிய தகைமையுடன் உள்ள ஆபத்தான அரசியல் தலைவியாக, உலகம் அம்மையாரைத்தான் இனங்கண்டுள்ளது.

ஜே.வி.பியுடன் இணைந்து அம்மையார் மேற்கொண்டுவரும் இனவாதப் பரப்புரை அவருக்குச் சில வேளைகளில் வெற்றியைத் தேடிக் கொடுக்கலாம். தேர்தலின் பின் யார் அரசமைத்தாலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும், கடைப்பிடிக்கவேண்டிய சர்வதேச நிர்ப்பந்தம் உண்டு. அத்துடன், புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சைத் தொடக்கவேண்டும். இவை நடைபெற்றால்தான் சிங்கள அரசிற்கான பொருண்மிய உதவிகள் கிட்டும். இல்லையேல், நாடு பாரிய பொருண்மிய நெருக்கடிக்குள் தள்ளப்படும். சமாதானப் பேச்சுக்களை அரசு முறித்துக்கொண்டால் போர் நடைபெறும் சூழல் பிறக்கும். வெளிநாட்டு பொருண்மிய உதவிகள் இல்லாது சிங்கள அரசால் போரை நீண்ட நாட்களுக்கு நடத்தமுடியாது. போருக்காக அரசு தனது எஞ்சியுள்ள வளங்களையும் விலையாகக் கொடுக்கவேண்டிவரும். அப்படியான நிலையில் சிங்கள அரசு பெரும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும். இவ்விதம் சர்வதேச ஆதரவில்லாது - அரசியல் - பொருண்மிய குழப்பங்களுக்குள் சிங்கள அரசு சிக்குண்டு ''தோல்வியடைந்த அரசுகளின்'' உலகப் பட்டியலில் சிங்கள தேசமும் இடம்பெறக்கூடும். இவையெல்லாம் நடைபெறமாட்டாது என்று கூற முடியாது.

இன்றைய நிலையில் உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி தமிழினத்தின் நிலை உறுதியானதாகவே உள்ளது. சிங்களத்தின் நிலை அவ்வாறானதாக இல்லை.

இத்தகையதொரு முக்கியமான வரலாற்றுக் கட்டத்திலேயே சிங்கள நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறவுள்ளது.





சிங்கள நாடாளுமன்றத் தேர்தல் மூலமாக தமிழரின் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணமுடியும் என்று விடுதலைப்புலிகள் என்றும் ஏற்றுக்கொண்டதில்லை. சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தின் அதிகார பீடம்தான் சிங்கள நாடாளுமன்றம். அங்கே ஒருசில கதிரைகளில் இருக்க இடம்பிடிப்பதன் மூலம் தமிழினம் எதையும் சாதிக்கமுடியாது. இது தமிழ்மக்களுக்குத் தெரிந்த உண்மைதான்.

எனினும், தற்போதைய அரசியற்சூழலில் தமிழரின் தேசிய ஐக்கியத்தையும் - ஏகோபித்த அரசியல் அபிலாசைகளையும் உலகிற்கு எடுத்துக்காட்ட நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்தவேண்டிய அரசியல் தேவை ஈழத்தமிழ் மக்களுக்கு எழுந்துள்ளது. இதேமாதிரியான ஒரு வரலாற்றுப் புறச்சூழலில் 1977இல் தமிழ்மக்கள் ஒரு அரசியல் இலட்சியத்திற்காக ஐக்கியப்பட்டு - வாக்களித்து தமது அரசியல் அபிலாசைகளை துலாம்பரமாக வெளிப்படுத்தி வரலாறு படைத்திருந்தனர்.

அதுபோலவே 27 வருடங்களின் பின்னர் இப்போது மீண்டும் அதேபோன்றதொரு அரசியல் இலக்குடன் தமிழரின் ஐக்கியத்தையும் - தமிழரின் அரசியல் அபிலாசைகளையும் உலகிற்கும் - சிங்கள ஆட்சியாளருக்கும் எடுத்துக்காட்டி வரலாறு படைக்கவேண்டிய கடப்பாடு தமிழ்மக்களுக்கு எழுந்துள்ளது.

இந்தத் தேர்தலில் தமிழ்மக்களின் அரசியல் தீர்ப்பை அறிந்துகொள்வதில் சர்வதேச சமூகம் பலத்த ஆவலுடன் உள்ளது. புலிகள் இயக்கம்தான் தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகள் என்பதை உலகிற்கு நிரூபித்துக்காட்ட சந்தர்ப்பம் வந்துள்ளது. அத்துடன் புலிகளின் தலைமையின்கீழ் ஒன்றுதிரண்டு தமது அரசியல் அபிலாசைகளைப் பெற்றுவிடத் தமிழ்மக்கள் ஐக்கியப்பட்டுள்ளனர் என்ற அரசியல் செய்தியையும் உலகிற்கு தமிழ்மக்கள் சொல்லவேண்டிய தருணம் இது.

தலைவர் பிரபாகரனின் தலைமையை ஏற்று தமிழ் அரசியல் கட்சிகள், ஒரு அரசியல் கூட்டில் ஒன்றிணைந்துள்ளனர். தமிழர் கூட்டமைப்பு என்ற பெயரில் 'வீடு' சின்னத்தில் இவர்கள் போட்டியிட உள்ளனர். தமிழரின் தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் தமிழர் கூட்டமைப்பு போட்டியிடுகின்றது. தமிழர் தாயகத்தில் தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தமிழ்க் கூட்டமைப்பைத் தெரிவுசெய்வதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் தமிழரின் அரசியல் பேரம்பேசும் சக்தியை உறுதிப்படுத்தமுடியும். அதே வேளை, தமிழரின் அரசியல் கோரிக்கைகளைத் தட்டிக்கழிக்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு சிங்கள அரசும் உள்ளாகும். சர்வதேச சமூகமும் தமிழரின் கோரிக்கைகளை ஆதரித்து - அரசியல் நிலைப்பாடெடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும்.

எனவே, எதிர்வரும் ஏப்ரல் 02 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் தங்களது வாக்குரிமையை தவறாது தமிழ்க் கூட்டமைப்பின் 'வீடு' சின்னத்திற்குச் செலுத்தி அரசியல் ரீதியாக தமிழரின் ஐக்கியத்தையும் - பலத்தையும் வெளிக்காட்டவேண்டும். ●



www.eelamview.com

www.eelamview.com



# பிச்சா பாத்திரத்துள் கிலுங்கும் சமாதானம்



"சமாதானம் பற்றி சிங்களத் தரப்பினரிடம் பதிந்திருக்கும் படிமம் என்னவெனில் சண்டையில்லாது இருப்பதென்பதைத் தவிர தீர்வு வேண்டும் என்பதல்ல. அதாவது அவர்களது அகராதியில் சண்டை இல்லையென்பதைத் தவிர தீர்வென்பதில்லை."

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசிலிருந்து ஓய்வுபெற்றிருந்த காலத்தில், 1995ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிய சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வு 'சமஷ்டி முறைதான்' எனக் கூறியிருந்தார்.

நீங்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஏன் சமஷ்டி முறையை உருவாக்கவில்லை என்று கேட்டபோது மக்கள் அதற்குத் தயாரில்லை என்று பதிலளித்தார்.

ஜே.ஆரின் முக்கிய தளகர்த்தரான லலித் அத்துலத் முதலியிடம் அவரது ஒக்ஸ்போட் பல்கலைக்கழக நண்பன் டேவிட் செல்போன் 1982ஆம் ஆண்டு தமிழரின் பிரச்சினைக்கான தீர்வு என்னவென்று லலித்திடம் கேட்டபோது "தமிழரின் தலைகளை நொருக்கப்போகின்றோம்" என்று பதிலளித்தார்.

தமிழரின் தலைகளை நொருக்கப் புறப்பட்ட இவர்கள் இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்பட்ட இலங்கைத்தீவை இந்து சமுத்திரத்தின் இரத்தக் குழம்பாய் மாற்றினர்.

இவர்கள் தமிழ்மண்ணுக்குத் தீமூட்டினர். ஆனால் அது இலங்கை முழுவதும் பரவிப் பற்றியெரிந்தது.

முதலில் நகரங்களுக்குத் தீமூட்டினர். பின்பு கிராமங்களுக்குத் தீமூட்டினர். தீயின் வேகம் காணாதெனக்கருதி விமானக் குண்டுகளால் நகரங்களையும் கிராமங்களையும் தகர்த்தனர். தலைகளை நொருக்கும் பணி கட்டடங்களை நொருக்கும் பணி கிராமங்களையும் நகரங்களையும் நொருக்கும் லலித்தின் பணி இறுதியில் இலங்கைத் தீவையே நொருக்கியும் பற்றியெரியவும் வைத்தது. இது வெறுமனே ஒரு இராணுவக் கண்ணோட்டம் என்று சொல்வதை விடவும் மொத்தமாய் ஒரு இன அழிப்புக் கண்ணோட்டமாய் நிகழ்ந்தது.

இன அழிப்புக் கண்ணோட்டம் தமிழினத்தையும் அதன் மண்ணையும்தான் அழிக்குமென்று இவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அதுவோ முழு இலங்கைத் தீவையும் முழு இலங்கையின் பொருளாதாரத்தையும் எரித்ததுடன் தங்களுக்கே விரும்பத்தகாத வகையில் தம்மிடம் காணப்பட்ட ஒரு அற்பசொற்ப அரசியல் கலாச்சாரத்தையும் எரித்துவிட்டது.

இத்தனையும் செய்து அலுத்துப்போன பின்புதான் அதுவும் தனது தளகர்த்தர்களை ஏவி ஜே.ஆர் பரீட்சித்துப்பார்த்துக் களைத்துப்போய் இருக்கையில்தான் அந்தக் களைப்பில் ஓய்வுபெற்றுக் கொண்டிருக்கையில்தான் ஜே.ஆர் சமஷ்டிதான் தீர்வு என்று கூறினார்.

அப்படி சமஷ்டிதான் தீர்வு என்று கூறுகையில் தான் பரிசீலித்துப்பார்த்த தமிழரின் தலைகளை நொருக்கும் வித்தையின் தவறை ஒப்புக்கொள்ளாது சிங்கள மக்கள் தயாரில்லாததால்தான் சமஷ்டித் தீர்வை தான் பதவியிலிருந்த காலத்தில் முன்வைக்கவில்லையென்று பழியை சிங்கள மக்களின் தலைகள் மீது போட்டார்.

ஒருபுறம் தமிழ்மக்களின் தலைகளை நொருக்க முயன்றார்கள். மறுபுறம் அது சரிவராமைக்கான பழியை சிங்கள மக்களின் தலைகள்மீது போட்டார்கள்.

இங்கு நாம் கருத்திலெடுக்கவேண்டிய விடயம் என்னவெனில் சிங்களத் தலைவர்களின் செயல் ஒவ்வொன்று அவ்வப்போது அவர்களின் வார்த்தைகளில் வேறொன்றுமாய் இருப்பதுதான். அதாவது அவர்கள் பதவியிலில்லாத காலத்தில் கூறிய வார்த்தை வரவேற்கத் தக்கதாய் அறிவுபூர்வமாய் இருந்தபோதிலும் அவர்கள் பதவியிலிருந்த காலத்துச் செயல்களைப் பார்க்கையில் தலைநொருக்கும் வித்தைதான் மிஞ்சி நிற்கிறது.

ஆதலால் இங்கு சமாதானம் பற்றிய எத்துணை வசீகரமான வார்த்தைகளை விடவும் அவைபற்றிய வித்தாரமான பேச்சுக்களை விடவும் அவற்றில் காணப்படும் முதலைக் கண்ணீரை விடவும் செயல்பூர்வமாக இவர்கள் எதனை நிலைநாட்டுகின்றனர் என்பதுதான் இங்கு கவனிக்கப்படவேண்டியது.

சமாதானத்துக்கான பிரதான சிங்களத் தலைவர்கள் தெருவிலிறங்கத் தயாரில்லாதபோது, தெருவில் இறங்காதபோது அதனால் அவர்கள் சிறைக்கூடம் செல்லத் தயாரில்லாதபோது அதன் பேரால் அவர்கள் ஒருநேர உணவை ஒறுக்காதபோது இவர்களை சமாதானத்தின் தூதர்களாக ஒருபோதும் ஏற்கமுடியாது. மக்கள் தயாரில்லையென்று பழியை மக்கள்மீது கூறுபவர்கள் மக்களைத் தயார்படுத்த ஒருபோதும் மக்கள் மத்தியில் இறங்கவில்லையே. இது இற்றைவரை அனைத்துச் சிங்களத் தலைவர்களுக்கும் பொருந்தும்.

யதார்த்தம் இதைவிடவும் தலைகீழாக உள்ளது. அதாவது சமாதானத்துக்காக சிங்களத் தலைவர்கள் மக்கள் மத்தியில் இறங்குவதில்லை என்பதுமட்டும் பிரச்சினையில்லை. அவர்கள் சண்டைக்காகவும் சமாதானத்தை அழிப்பதற்காகவும் மக்கள் மத்தியில் இறங்குகிறார்கள் என்பது மறுபுற உண்மை.

"சமாதானம் பற்றி சிங்களத் தரப்பினரிடம் பதிந்திருக்கும் படிமம் என்னவெனில் சண்டையில்லாது இருப்பதென்பதைத் "தவிர தீர்வு வேண்டும் என்பதல்ல. அதாவது அவர்களது அகராதியில் சண்டை இல்லையென்பதைத் தவிர தீர்வென்பதில்லை."

எனவே இங்கு சமாதானம் பற்றிய பிரச்சினைகள் கருத்துருவங்கள் அணுகுமுறைகள் என்பனவெல்லாம் மிகவும் ஆழமானவை. இந்த ஆழத்திலிருந்துதான் சமாதானத்தினுடைய தன்மையையும் அதற்கிருக்கும் பலத்தையும் அதனுடைய நடைமுறைச் சாத்தியத்தையும் விளங்கிக்கொள்ளலாம்.

தீவு ஒருபுறம் கருகியிருப்பதனாலும் மறுபுறம் இரத்தக் குழம்புக்குள் புதையுண்டிருப்பதனாலும் இதனை மீட்க இலங்கை அரசுக்கொரு பொருளாதாரபலம் தேவைப்படுகிறது. அந்தப் பொருளாதாரப் பலத்தையடைய கட்சிக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது வெளிநாட்டினுடைய நிதியுதவி தவிர்க்கமுடியாததாகிறது. எனவே பிச்சா பாத்திரத்தை உயர்த்திப் பிடிப்பதனூடாக சமாதானம் பற்றிப் பேசவேண்டியது சிங்களக் கட்சிகளுக்கு வேண்டியதாகியது. அதாவது சமாதானம் "பிச்சா பாத்திரத்துள் கிலுங்குகின்றது என்பதே இங்கு உண்மை. இதற்கப்பால் சிங்களத் தலைவர்களின் மத்தியில் சமாதானம் என்பது அவர்களின் திடசித்தத்திலும் மனப்பாங்கிலும் குடிகொள்ளவில்லை.

**- சாரணன் -**



www.eelamview.com

www.eelamview.com



# விடுதலையின் விழுதெறிந்தவன்

**நேற்றுத்தான்** அவனது வீட்டிற்குச் சென்றிருந்தேன். 'முதுமை' அவரை அந்தப் பனையோலைப் பாயில் கிடத்தியிருந்தது. தன் வாழ்நாட்களின் இன்ப, துன்பங்களை பௌர்ணமி முழுநிலவுப் பொழுதில் மீட்டி அசைபோடும் ஆறுமுகம் ஐயாவுக்கு மனைவி பாக்கியம்கூட அவருக்கெனக் கிடைத்த பாக்கியம்தான்.

"அப்பா" இனிமையான தாழ்வான என் அழைப்பு. என் முகத்துக்கருகாக 'கரிக்கன்' விளக்கினை நீட்டியவர் "மங்கிய பொழுதுகளில் படலையைத் திறந்து 'அப்பா' என என் மகன் அழைப்பதாய் ஞாபகம்" என்றவாறே கதைக்கத்தொடங்கினார்.

"எப்பையாவது ஒரு பொழுதில் வருவான். ஈரம் பட்டிருக்கும் 'ரவை'களை துடைத்துத் தருமாறு கூறுவான். உறைப்பாய் இறைச்சியைச் சமையுங்கோ என தாயாரிடம் கூறுவான். எங்கிருந்தோ அவனது தொலைத்தொடர்பு சாதனத்துக்கு தகவல் வரும். சமைத்ததைச் சாப்பிடாமலேயே ஓடிவிடுவான்..." "உவர் அவனையே நினைச்சு நினைச்சு தேய்ந்து போறார்" தேய்ந்து போயிருந்த அம்மா, அப்பாவை ஆறுதல் படுத்தினார்.

அவனுடைய தமையனின் மகளும் அங்கிருந்தாள். அவனது சித்தப்பா இயக்கத்தில் இணைந்ததன் பின் பிறந்த அவள், சித்தப்பாவின் கதைகளை ஏக்கத்துடன் கேட்க - அந்தப் பிஞ்சு விழிகளின் தேடலின் ஊடாக அவனது வாழ்க்கையைப் பார்க்கிறேன்.

'முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம்' தன் மகனின் புகழுடலுக்கு இறுதியாய் வணக்கம் செலுத்திட, கண்ணீருடன் காத்திருக்கும் தந்தையிடம், "ஐயா அழாதீங்கோ, உங்கள் மகன் பிறந்ததே போராடத்தான். அவன் இன்னுமொரு பிறவி எடுப்பான்; கலங்காதீங்கோ," கலங்கியபடியே கூறிய பாதிரியாரின் உணர்வுகளுக்கூடாகவும் அவன் வாழ்வைப் பார்க்கிறேன்.

அது 1988. இன்னுமொரு அன்னிய ஆக்கிரமிப்பை தமிழர் தேசம் எதிர்த்து நின்ற நேரம். இந்தியப் படையினரின் போர்க் குற்றங்கள்,

> "தம்பி, அவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையில் அவனுக்கும் சேர்த்து புதுவருசத்துக்கு உடுப்பு எடுத்திற்றன்"

கொடூரங்கள் அவனது விடுதலை உணர்வுக்கு நீரை வார்த்தன.

1988.09 'நிலா' அவனது இயக்கப் பெயர். மாம்பழம், அம்மா, ஜோன், வில்வம். எனக் காலம் இன்னுமதிக பெயரினை அவனுக்கு வழங்கியது.

மன்னார் - 09 படைப்பயிற்சி முகாமில், அவனது தமிழீழ விடுதலைப்போரின் வாழ்வு தொடங்கியது - பால்போன்ற பௌர்ணமி நிலவேதான் அவன் வதனம் - பெரியோர், சிறியோர் என்றில்லாது எல்லோருடனும் சரிக்குச்சரி அளவளாவும் சுட்டிப்பாங்கு.

"டேய் பூநகரி தெரியுது" என்றால் சட்டென சிரிப்பை அடக்கி காவிப் பற்களை மறைத்துக்கொள்ளும் நாணம்.

கற்பிக்கப்படும் விடயங்களைக் காதுகொடுத்து ஆழமாய் கிரகித்து எழுப்பப்படும் வினா, அந்த 'நிலா'வைப் பயிற்சி முகாமில் வேறுபடுத்தியே காட்டியது.

"சுரேஸ்! இருபது முத்துக்களை உன் கையில் ஒப்படைக்கிறேன். அவர்களை வைரக்கல் ஆக்குவதும், உப்புக்கல் ஆக்குவதும் உன் பொறுப்பு." அப்போழுது மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளராகவிருந்த சுரேசிடம் கேணல் பானு அப்படித்தான் கூறினார்.

அந்த இருபது முத்துக்களில் வில்வமும் (நிலா) ஒருவன். முதற்பணி 'அரசியல்'. மன்னார் மாவட்டத்தில் வட்டக்கண்டல் பாலப்பெருமாள்கட்டு, குருவில்வான் என பெரியதொரு பிரதேசத்தின் அரசியல் பணி, இந்த இளம் போராளியின் கைகளில்.

இந்தியப் படையினரின், தேடுதல் சுற்றிவளைப்புக்களில் அகப்படாது போர் புரிந்துகொண்டே மக்கள் மனங்களில் விடுதலை நெருப்பை பற்றவைப்பதும், சமூகக் குறைகளைச் சுட்டிக்காட்டுவதும், தட்டிக்கேட்பதும் சவால்கள் நிறைந்த பணிகள்தான். சவால்களை எதிர்கொண்டான்.

பாடசாலை நிகழ்வுகளில் இறுதி நன்றி உரையில் அவனது பெயர் பல தடவைகள் உச்சரிக்கப்படும்.

'முஸ்லிம் பள்ளி' நண்பனின் அருகிலியின் 'பார்'இல் (bar) இருந்தபடியே விடுதலைப்போராட்டம் பற்றி விரிவுரை நடாத்துவான்.

யேசுவின் சிலுவை நிழலில், பாதிரியாருடன் சமூக மேம்பாடு திட்டமிடப்படும். இந்துக்கோவில் திருவிழாக்களில் ஓதப்படும் மந்திரத்தில் அவனது பெயரும் ஒலிக்கப்படும். வறிய மாணவர்களின் கல்வித் தேவைகளுக்காக அவனது பாதங்கள் தடைப்படிகளுக்கும், வீட்டு வாசலுக்கும் ஏறியிறங்கும்.

கட்டுக்கரைக் குளத்து வாய்க்கால்வழி நீர் பாய்ச்சுதலில் ஏற்படும் பிணக்குகளிலும் அவனது பிரசன்னம் இருக்கும்.

வில்வம் அந்த அழகிய கிராமங்களின் ஒவ்வொரு வீட்டுக்கும் பிள்ளை - இந்தியப் படையினருக்கு மட்டும் தொல்லை.

1989, மன்னார் குமணாயங்குள இந்தியப் படையினருக்கெதிரான பதுங்கித் தாக்குதலில் அவனது அசாத்திய துணிச்சல், வேகம், நிதானம் சுரேசினால் அவதானிக்கப்பட்டது.

1989.09 மன்னார் அடம்பன் முகாமிலிருந்து நெடுங்கண்டல் நோக்கி காவல் உலாவந்த இந்தியப் படையினருக்கும், கைக்கூலிக் குழுவுக்கும் எதிரான பதுங்கித் தாக்குதலில் கைக்குண்டை நிதானமாய் எறிந்து களத்தைத் தமக்கு சார்பாய் மாற்றியபோது அவனது சாதுரியம் இனங்காணப்பட்டது.

அவனது பணியில் உயிரைப் பணயம் வைத்து மிகுந்த ஈடுபாட்டுடன், பொறுப்புணர்வுடன் செயற்பட்டாலும் இளவயது குறும்புத்தனங்கள் அப்பப்ப எட்டிப் பார்க்கத்தான் செய்தன.

ஆதரவாளர் ஒருவரின் சாளி (chaly) உந்துருளியை எடுத்து அடம்பனிலிருந்து மாந்தைக்குச் செல்ல - அந்தவேகம் உந்துருளியைச் சேற்றுக் குளத்துக்குள் இறக்க 'வில்வம் விழுந்திட்டான்' எனத் தெரிஞ்ச சனம் எல்லாம் ஓடிவர, விசயத்தை விளங்கியவன் உந்துருளியைக் கழுவுவதுபோல் பாசாங்கு செய்ய "தம்பி காலில இருக்கிற சூவை(shoo) கழட்டிப்போட்டு கழுவலாமே" சனம் விழுந்துவிழுந்து சிரிக்க அவனாலும் சிரிக்கத்தான் முடிந்தது.

தன் பணிகளை அறிக்கைப்படுத்தலில் அவனது புலனாய்வுப் பார்வை, விடயத்தை அலசி ஆராயும்போது இனங்காணப்படும் புலனாய்வுக் கண்ணோட்டம் என்பன, இந்தியப்படை எமது மண்ணைவிட்டு அகற்றப்பட்டிருந்த 1990களில் புலனாய்வுத்துறைக்குள் அவனை உள்வாங்கக் காரணங்களாய் அமைந்தன.

புலனாய்வுத்துறை அவனுக்குப் புதிது. "எந்தத் துறைக்குள் சென்றாலும் அங்கு முத்திரை பதிக்கவேணும்" என்ற அவனது ஈடுபாட்டிற்கு "புலனாய்வுக் கல்லூரி ஆரம்பிக்குதாம்" என்ற செய்தி காதில் விழுந்ததும்; விரைவாகக் கடிதம் எழுதி அனுப்பி, புலனாய்வுப் பொறுப்பாளரிடமிருந்து அக்கல்லூரியில் இணைவதற்கான அனுமதியையும் பெற்றிருந்தான்.

படிப்புக்கள் முடிந்ததும் புலனாய்வுப் பணியில் நளினின் உதவிப் பொறுப்பாளராக மன்னார் மாவட்டத்தில்.

இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் பெருவாரியாக தங்கியிருந்த மடுப்பிரதேசம் உள்ளிட்ட, மன்னார் பெருநிலப்பரப்பில் தேசத்துக்கெதிரான சவால்களை எதிர்கொள்வதும் காவல்துறையின் செயற்பாடுகள் விரிவாக்கப்படாத நிலையில் சமூகக் குற்றங்களை, சீரழிவுகளைத் தடுப்பதும் புலனாய்வுப் பணியில் முக்கியமான இலக்குகள்.

அவனது செயற்பாடுகளை நளன் அவர்கள் விபரிக்கையில் "நான் இல்லாத சமயங்களில் மாவட்டத்தில் ஏற்படக்கூடிய எதிரியின் புலனாய்வுச் சவால்களையும், சமூகக் குற்றங்களையும் பகுப்பாய்ந்து, அதன் ஆழங்கண்டு, அதன் சரியான இறுதி வடிவத்தை இனங்கண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளக் கூடியவன் என்ற நம்பிக்கை எனக்கெப்போதும் அவன்மீது இருந்தது" என்றிருந்தார்.

1994, இப்படித்தான் ஒருநாள், வன்னி - யாழ் தொடர்புப் பாதையாகக் கிளாலி ஏரி இருந்த காலம். யாழ்ப்பாணத்தில் எமது கண்காணிப்பிலிருந்த படை உளவாளி ஒருவன் கண்காணிப்பிலிருந்து விடுபட்டு வன்னிக்குப் படகேறியிருந்த செய்தி தெரியவர, மன்னார் பெரியமடுவிலிருந்த வில்வத்திடம் அவசரமாய் இத் தகவலினைப் பரிமாற, சுசந்திடம் இரவல் உந்துருளியைப் பெற்று சுமார் எழுபத்தைந்து கிலோமீற்றர் ஓடி, கிளாலிக் கரையிலிருந்து படகு நல்லூர் கரையை வந்தடைய முன், நல்லூர்க் கரையில் நின்று உளவாளியை வரவேற்றான்...

புலனாய்வுப் பணியில் மக்களுடன் தன்னை இணைத்துக் கொள்ளும், பிணைத்துக்கொள்ளும் அவனது செயல் அலாதியானது.

பாடசாலையை விட்டு வீடுகளுக்கு வரும் சிறுவர்கள் பலர் அவனது உந்துருளியிலேயே வீட்டு வாசலில் இறங்குவர். அவனிடம் கைவசம் இருக்கும் இனிப்பு வகைகளை சிறுவர்களை ஒன்றுகூட்டி வழங்கி மகிழ்விப்பான்.

முன்பின் அறிமுகமில்லா வீடுகளுக்குள் ஏற்கனவே நன்கு அறிமுகமாகிப் பரிச்சயமான உறவாய் உள்நுழைவான். சமையல் அறைக்குள் சென்று அடுப்படியில் உணவினைத் தானே போட்டுப் பரிமாறும்வரை உறவு நீளும். காலம் அவர்களின் உறவுகளில் ஒருவனாய் அவனை மாற்றிவிடும். அவனது இவ்வகையான அணுகுமுறை அரசியல் பணி ஆற்றிய தளத்திலிருந்து எழுந்தவை.

இந்த உறவுகளை; ஆதரவாளராக, முகவர்களாக, படகோட்டிகளாக புலனாய்வுப் பணியில் இணைத்தமை அவனது வெற்றிக்கு

**வீரப்பிறப்பு**

**06.09.1971**

**வீரச்சாவு**

**11.12.1998**




**மேஜர் வில்வம்.**
**(ஜோண்)**
**ஆறுமுகம் தனபாலசிங்கம்**
பூநகரி மன்னார்
**(முன்னணிப் புலனாய்வுச் செயற்பாட்டாளன்)**

காரணமாய் அமைந்ததுபோல, ஆதரவாளரின் வீட்டில் கோழிக்கறி உண்பதற்காய், தன் கைத்துப்பாக்கியால் கோழியைச் சுட்டபோது - அந்த ரவை இலக்குத்தவறி அயல்வீட்டுச் சிறுமியைக் காயப்படுத்தியமை, அதனால் கண்டிக்கப்பட்டமை, மற்றும்,

மக்களுடனான உறவில், அவனது அதீத ஈடுபாடு - பழக்கம், பண்பான அணுகுமுறை என்பன, விடுதலை உணர்வு சார்ந்தும், புலனாய்வு நோக்கம் கருதி இருந்தும்; அவை காதல் விடயமாக சமூகத்தில் சிலரால் பார்க்கப்பட்டமை, 'உறவு நிலையில் அவதானம் கொண்டிருக்கவேண்டும்' என்ற படிப்பினையை உணர்த்தி நின்ற இன்னுமொரு பக்கத்தையும் தோற்றுவித்ததெனலாம்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)




www.eelamview.com

www.eelamview.com

# போர்க்களமும் பெண்கள் பங்களிப்பும்

**தீயெடுத்தீர்; கனல் சொரிந்தீர்**
**திசையெங்கும் பகை சரித்தீர்**
**தாய்மடியில் நீர் சிரித்தீர்**
**தமிழீழம் எங்கும் நீர் நிலைத்தீர்.**

**2ம் லெப்.மாலதி படையணியின் 1117 மாவீரர் அஞ்சலி வரிகள்.**

**வானத்தைத்** தாங்கிப் பிடிப்போரில் பாதிப் பங்கினர் பெண்கள் என்று பெண்ணின் பெருமையை உணர்ந்துவோர் கூறுகின்றனர். பெண்களின் உடலமைப்பு வித்தியாசமானது. உளப்பாங்கும் வேறுபட்டது. ஒரு சராசரிப் பெண்ணின் உயரம் ஒரு சராசரி ஆணிலும் பார்க்க ஐந்து அங்குலம் குறைவாக இருக்கிறது. ஆண்களின் இடுப்பிலிருந்து தோள் வரையான பகுதி பெண்களின் அதே உடற்பகுதியிலும் பார்க்க இருமடங்கு வலுவுடன் அமைகின்றது. இருபாலாரின் தசைநார் உருவமைப்பும் வித்தியாசப் படுகின்றது.



அமெரிக்க இராணுவத்தில் புதிதாக இணையும் பெண்கள் ஆரம்பகட்டப் பயிற்சிகளின்போது புதிதாக இணையும் ஆண்களிலும் பார்க்க இருமடங்கு கூடுதலாகக் காயமடைகின்றனர். பெண்களின் எலும்புக்கூடு பொதுவாக ஆண்களுடையதிலும் பார்க்க எடை குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். பெண்கள் மத்தியில் கூடுதலாக எலும்புமுறிவு ஏற்படுகின்றது. அமெரிக்க இராணுவத்தின் பெண் கேணல் தர அதிகாரிகளில் முப்பது வீதத்தினர் தமது பதவிக்காலத்தில் எலும்பு முறிவுக்கு உட்படுகின்றனர். ஆண் கேணல்தர அதிகாரிகளில் ஏழு வீதத்தினர் மாத்திரம் தமது பதவிக்காலப்பகுதியில் இவ்வகைப் பாதிப்படைகின்றனர்.

சோர்வடையா மனவுறுதியும் பணி ஈடுபாடும் பெண் இராணுவத்தினருக்கு இருப்பதாக இராணுவ மருத்துவர்கள் கூறுகின்றனர். களமுனையில் இருபாலாரும் ஒன்றாகப் பணியாற்றும்போது உடலமைப்பு வித்தியாசங்கள் பெரிதாக வெளிப்படுவதில்லை. ஆணளவு போர்க்குணத்தையும் சண்டைத் திறனையும் பெண்கள் வெளிப்



படுத்துகின்றனர். 1991இல் நடந்த வளைகுடாப் போரில் அமெரிக்கப் படைகளில் 530,000 ஆண்களும் 40,000 பெண்களும் இணைந்து போரிட்டனர். அதியுச்ச கடும் போர் நூறு மணிநேரம் நடைபெற்றது. இதில் நூற்றி நாற்பத்திரண்டு ஆண்களும் ஆறு பெண்களும் சாவடைந்தனர்.

மேற்கூறியவை தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரம்பரியத்தைப் பார்ப்போம். தமிழீழப் பெண்களின் இராணுவக் கட்டமைப்பு (MILITARY STRUCTURE) தனி நிறுவனமாக உருப்பெற முன்பே எமது தேசிய விடுதலைப்போரில் வயது வேறுபாடின்றி பெண்கள் இணைந்துள்ளனர். இவர்களுக்கான போர்ப்பயிற்சி ஆண்களால் வழங்கப்பட்டது. 12 ஒக்ரோபர் 1986ஆம் நாளில் நன்கு பயிற்றப்பட்ட ஆயுததாரிகளான இளம் பெண்கள் மன்னார் அடம்பனில் சிறிலங்கா இராணுவத்தை எதிர்கொண்டனர். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மோதலில் லெப்.கேணல் விக்ரர் தலைமையிலான பெண் போராளிகள் பெருந்தொகையில் வந்த எதிரிப்படையை பின்வாங்கச் செய்தனர். ஆனால் லெப்.கேணல் விக்ரர் மாத்திரம் இப்போரில் வீரச்சாவடைந்தார்.

பெண் போராளிகளைக்கொண்ட பெண் தலைமைத்துவத்தில் இயங்கும் தனியான அணி உருவாகுவதற்குச் சிலகாலம் பிடித்தது. புலிகள் அமைப்பில் இணையும் இளம் பெண்போராளிகளின் எண்ணிக்கை உயர்வும் அவர்கள் வெற்றிகரமாக மனவுறுதியுடன் பங்குபற்றிய போர் நடவடிக்கைகளின் சிறப்பும் தனி அணி உருவாக்கத்தை வலியுறுத்தின. தம்மைத் தாமே நிர்வகிக்கும் பொறுப்பைப் பெறவேண்டும் என்று பெண் போராளிகள் விரும்பினர். பெண் போராளிகளின் தளபதியாக ஜூன் 1989இல் மேஜர் சோதியா நியமனமாகிய பின் தனி அணியின் தோற்றம் உறுதி செய்யப்பட்டது. மேஜர் சோதியாவின் தீரமும், தொலைத்தொடர்பு, களமருத்துவம் போன்ற துறைகளில் அவருக்கிருந்த ஆளுமையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முதலாவது பெண் தளபதியாக உயரும் தகுதியை அவருக்குக் கொடுத்தன.

சோதியா தலைமையிலான பெண்கள் படையணி 26 செப்ரம்பர் 1989இல் தோற்றம்பெற்றது. எமது விடுதலைப் போரில் இந்த நாள் வேறொரு வகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இதே நாளில் 1987இல் லெப்.கேணல் திலீபன் உண்ணா நோன்பிருந்து வீரச்சாவடைந்தார். விடியல் என்ற பெயருடன் பெண் போராளிகளின் பயிற்சிப் பாசறையும் செயலகமும் இதே நாளில் திறந்துவைக்கப்பட்டது. 06 ஒக்ரோபர் 1989இல் இப்பயிற்சிப் பாசறையில் இராணுவப் பயிற்சிகள் தொடங்கின. இந்த அணி தொடங்கிய ஆறுமாத காலத்தில், 11 ஜனவரி 1990ஆம் நாள் அதன் தளபதி சோதியா நோய்வாய்ப்பட்டு வீரச்சாவடைந்தார்.

தென்தமிழீழத்தின் பெண் புலிப்போராளிகளுக்கான முதலாவது இராணுவப் பயிற்சிமுகாம் 15 ஆகஸ்டு 1990இல் திறக்கப்பட்டது. சிறிலங்கா அரசின் வன்கொடுமைகளும், இன அழிப்பு நடவடிக்கைகளும் கிழக்கின் பெண்களைப் பெருமளவில் பாதித்தது. சிங்களக் குடியேற்றங்களோ தமிழ்மக்களைத் தமது பாரம்பரிய நிலத்திலிருந்து விரட்டும் நோக்குடன் கிழக்கில் விரிவுபடுத்தப்பட்டன. 1980களின் பிற்பகுதியில் தென்தமிழீழப் பெண்கள் இராணுவப் பயிற்சிக்காக வடக்கிலுள்ள முகாம்களுக்கு வந்தனர். 1990க்குப் பின் அவர்களுடைய பகுதிகளிலேயே முகாம்களைத் திறந்து பயிற்சி வழங்கவேண்டிய கட்டாயத்தேவை எழுந்தது. வடக்கிலுள்ள பெண்கள் பயிற்சி முகாம்களை ஒத்தவையாக கிழக்கு முகாம்கள் இருந்தன. ஆனால் சுயாதீனமான நிர்வாகம், உணவு உற்பத்தி, மருத்துவம், ஆயுதக் களஞ்சியம் என்பவற்றை கிழக்குப் பெண்கள் ஆரம்பம்தொட்டே கொண்டிருந்தனர்.



"தேசியத் தலைவர் அவர்களின் தொலைநோக்கான பார்வையின் வெளிப்பாடாக அன்று தோற்றம்பெற்ற மகளிர் படைப்பிரிவு இன்று பல்வேறு படையணிகளாக, துறைகள், பிரிவுகளாகப் பரிணமித்து நிற்கின்றது" என்கிறார் கேணல் கருணா. (விழுதாகி வேருமாகி முதற்பதிப்பு ஒக்ரோபர் 2003, பக்கம் 08) 2ம் லெப் மாலதி பெயரால் உருவாக்கப்பட்ட பெண்கள் படையணியின் பதிப்பாக வெளிவரும் இந்நூல் தமிழீழப் பெண்போராளிகளின் வரலாறாக இடம்பெறுகின்றது.

10 ஒக்ரோபர் 1987இல் இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் 2ம்லெப்.மாலதி வீரச்சாவடைந்தார். தமிழீழ வரலாற்றில் வீரச்சாவடைந்த முதலாவது பெண்போராளி இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது பெயரில், 1995இல் மாலதி படையணி உருவாக்கப்பட்டு இற்றைவரை செயற்படுகின்றது.

எதிரியின் ஆக்கிரமிப்பிலிருந்து தப்பிப்பதற்காக 1940களில் சோவியத் ஒன்றியம், இஸ்ரேயில் போன்ற நாடுகள் தற்காப்புப்போர் நடத்திய காலத்தில் தமது இராணுவ அணிகளில் பெருமளவு பெண்களை இணைத்துக் கொண்டன. பெண்களை இணையும்படி அறைகூவி அழைக்கும் நிலைக்கு இந்த நாடுகள் தள்ளப்பட்டன. 15 மே 1948இல் இஸ்ரேயில் சுதந்திரப் பிரகடனம் செய்தது. அதைத் தொடர்ந்த சில மணிநேரத்தில் ஆறு அரபு நாடுகள் அதன்மீது தாக்குதல் தொடுத்தன. வாழ்வா, சாவா என்ற அடிப்படையில் போரிடவேண்டிய நிலையில் தனது அணிகளில் இஸ்ரேயில் தமது பெண்களை இணைத்துக் கொண்டது. ஏழு மாதங்கள் தொடர்ச்சியான போர் நடைபெற்றது. பல பெண்கள் உயிர்த் தியாகம் செய்தனர். இறுதியில் எதிரிப் படைகள் விரட்டப்பட்டன.

22-23 ஜூன் 1941இல் ஒப்பரேஷன் பாபரோசா (OPERATION BARBAROSSA) என்ற பெயரிடப்பட்ட படை நடவடிக்கையை ஜேர்மன் இராணுவம் சோவியத் ஒன்றியத்தின் மீது தொடுத்தது. இப்படைகள் ஸ்ராலின்கிராட் நகரை அண்மித்தபோது பெண்களை உதவிக்கு அழைக்கும் நிலைக்கு ருஷ்ய இராணுவம் வரநேர்ந்தது. அழைப்பை ஏற்று இணைந்தவர்களில் பலர் பள்ளி மாணவிகள் என்கிறார் வரலாற்றாசிரியர் அன்தனி பீவர் (STALINGRAD BY ANTONY BEEVOR. PENGUIN BOOKS. 1999) இவர்கள் சூட்டு அனுபவம் இல்லாதவர்கள். இவர்களில் ஒருவராவது குறிவைத்துச் சுடுவதற்குப் பயிற்றப்படவில்லை என்கிறார் இந்த நூலாசிரியர். இவர்கள் களத்தில் நுழைந்தவுடனேயே சோவியத் ஒன்றியத் தயாரிப்பான 37எம்எம் விமான எதிர்ப்புப் பீரங்கிகளை இயக்கும்படி பணிக்கப்பட்டனர்.

ஒரேவகைப் பீரங்கியைப் பயன்படுத்தி இந்த வீரப் பெண்கள் மேலே பறந்த ஜேர்மன் விமானங்களைச் சுட்டனர். அதன்பின் படுவேகமாக நிலமட்டத்திற்கு பீரங்கிக் குழாயை இறக்கி ஜேர்மன் தாங்கிகள், காலாற் படைகளைச் சுட்டனர். பீரங்கிக் குழாயை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் அவர்கள் தமது கைகளால் அதற்குரிய கருவியைச் சுற்றவேண்டியிருந்தது. பீரங்கி நிலைகளை அழிப்பதற்கு ஜேர்மன் விமானப்படை ஸ்ருக்கா(STUKA) பொம்பர்களைப் பயன்படுத்தியது. பங்கர்களுக்குள் ஓடி மறைவதற்கு இப் பெண்கள் மறுத்தனர். அடிவாங்கியும் நொருங்காமல் சிறு திருத்தங்களோடு ருஷ்யப் பீரங்கிகள் மீண்டும் சுடத்தொடங்கின.

மாஷா(MASHA) என்ற பெண்ணின் பெயர் ஸ்ராலின் கிராட் போர் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் நான்கு நாட்களாகத் தொடர்ச்சியாக, ஓய்வெடுக்காமல் பீரங்கியைச் சுட்டபடியே நின்றார். ஒன்பது விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக மாஷா சிறப்பிக்கப்படுகிறார். இவரும் இவருடைய தோழிகள் யாபேரும் ஜேர்மன் விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர் என்பது பிறிதோர் செய்தி. சோவியத் ஒன்றியத்தின் விமானப்படையில் பெருமளவு பெண்கள் பணியாற்றினர். மரினா றஸ்கோவா (MARINA RASKOVA) என்ற மிகவும் இளவயதினரான ருஷ்யப் பேரழகி ஒரு விமான அணிக்குத் தலைமை தாங்கினார். இவர் எதிரியின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பல வசதியான குடும்பங்களைச் சேர்ந்த இளவயதுப் பெண்கள் தமது சொகுசு வாழ்வைத் துறந்து தாயக மீட்புப்போரில் பங்காற்றினர். சோவியத் ஒன்றியத்தின் 62ஆம் படையணியின் மருத்துவப் பிரிவின் தலைவியாக ஒரு பதினெட்டு வயது பெண் இடம்பெற்றார். மருத்துவக் கல்லூரி மாணவியான இவர் முன்பு குதிரைப் படையில் பணிபுரிந்தவர். இவரின்கீழ் நூறு இளம்பெண்கள் மருத்துவப் பிரிவில் கடமையாற்றினர். போர் மூர்க்கத்தனமாக நடக்கும் இடங்களுக்குள் நிலத்தில் ஊர்ந்துசென்று காயப்பட்டோரை முதுகில் வைத்து மீண்டும் நிலத்தில் ஊர்ந்து வருவது இவர்கள் பணி. இந்த அணியில் மொஸ்கோ நகரின் இலக்கியப்பணி செய்யும் குடும்பத்தில் பிறந்த குல்யா கொரொலேவா (GULYA KOROLEVA) மகப்பேறு முடிந்த சில நாட்களில் களம் புகுந்தார். அப்போது அவருக்கு

www.eelamview.com

www.eelamview.com



வயது இருபது.

குல்யா களத்தில் இறந்தபின் 'செங்கொடி விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். நூற்றுக்கு மேற்பட்ட குஷ்யர்களை இவர் மரணத்தில் இருந்து காப்பாற்றினார். பதினைந்து ஜேர்மன் படையினரை மைபின் சூடு மூலம் அவர் கொன்றார். ஸ்ராலின் கிராட் படைத் தலைமைச் செயலகம் வழங்கிய பல விருதுகளை இளம் பெண்களே பெற்றனர். பெக்கற்றீனா பெற்லியூக் என்ற இளம்பெண் போர்த் தாங்கி ஓடுவதிலும் தாக்குதல் நடத்துவதிலும் சாதனை படைத்தார். மிகக் கூடுதலான பெண்கள் மருத்துவப் பிரிவில் பங்காற்றினர். இவர்கள் பெரும்பாலும் மருத்துவக் கல்லூரி மாணவிகளாவர். இவர்களுடைய இறப்பிற்கு ஜேர்மன் படைகளின் தாக்குதல் காரணமாகக் கூறப்படுகின்றது. காயம்பட்ட குஷ்ய வீரர்களுக்கு தமது குருதியை ஒரே நாளில் பலமுறை கொடுத்ததால் இறந்தோரும் உளர். ஸ்ராலின் கிராட் போரில் செயற்பட்ட விசேட படையணிகளில் ஒன்றின் கொமாண்டராக ஒரு இளம்பெண் பொறியியல் தொழிலாளி பங்காற்றினார். தொலைத்தொடர்பு அதிகாரிகளாகவும் பல இளம்பெண்கள் களத்தில் செயற்பட்டனர்.

இப்போது குஷ்யாவும் இஸ்ரேலும் தமது பெண் போராளிகளைக் களம் அனுப்புவதை நிறுத்தியுள்ளன. பெண்கள் கொல்லப்படுவதையும் போர்க் கைதிகளாகச் சிறைப்பிடிக்கப்படுவதையும் இந்த நாடுகள் நெருக்கடி முழுந்தபின் விரும்பவில்லை. அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் காலத்தில் பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்த லெஸ் அஸ்பின் (LES ASPIN) அமெரிக்கப் பெண் படையினர் போர்க்களம் சென்று நேரடிச் சண்டையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கினார். எந்தவொரு இராணுவத்தின் தவிர்க்கமுடியாத உறுப்பினராகப் பெண்கள் இடம் பெறுவதாக அவர் கருத்துத் தெரிவிக்கிறார்.

களத்தில் பால் வித்தியாசம் மறைகின்றது என்று இராணுவ வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். "பெண் போராளிகளின் வாழ்வும் நிர்வாகமும் வேறுபட்டாலும் அவர்களுக்கான களத்தெரிவும் இராணுவப் பணியும் பால் வித்தியாச

**களத்தில் பால் வித்தியாசம் மறைகின்றது என்று இராணுவ வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். "பெண் போராளிகளின் வாழ்வும் நிர்வாகமும் வேறுபட்டாலும் அவர்களுக்கான களத்தெரிவும் இராணுவப் பணியும் பால்வித்தியாசமற்றது" என்கிறார் அடேல் ஆன் பாலசிங்கம்**

**(*WOMEN FIGHTERS OF LIBERATION TIGERS BY ADELE ANN. AN LTTE PUBLICATION, 1993*)**

மற்றது" என்கிறார் அடேல் ஆன் பாலசிங்கம் (WOMEN FIGHTERS OF LIBERATION TIGERS BY ADELE ANN. AN LTTE PUBLICATION, 1993) இதன் பொருள் யாதெனில் தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவக் கட்டமைப்பில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுவேறான இராணுவக் கடமைகள் கொடுக்கப்படவில்லை. சுருங்கச் சொல்லின், ஒருவர் செய்வதையே அடுத்தவரும் செய்கின்றனர்.

ஆண் போராளிகள் சந்தித்த அதேவகை நெருக்கடிகளையும், துன்பங்களையும் பெண்களை மாத்திரம் உறுப்பினராகக்கொண்ட போராளிகள் அனுபவித்தனர். சாதகமற்ற நிலத்திலே சாதகமான பகுதிகளைத்தேடி காப்பரண்கள், பதுங்கு குழிகளை அமைத்தனர். வானத்தையே கூரையாகப் பயன்படுத்திய இவர்களை மார்ச்சு மாத வெய்யில் வறுத்தெடுத்தது. அதற்கு நேர்மாறாக இரவில் குளிர் நடுக்கியது. வீசுகின்ற உப்புக்காற்று உடலை எப்போதும் பிசுபிசுப்பாக வைத்திருந்தது. ஓய்வில்லாத வேலையால் பெருகிய வியர்வை உடலை எரித்தது. உடைகள் மிக வேகமாகப் பழுதடைந்து இற்றுப்போகத் தொடங்கின. குடிநீர் எடுப்பதற்கு நீண்ட நடைப்பயணங்களை மேற்கொண்டனர். குளிப்பதற்கும் அப்படியே. ஒரு 'பாலைவனப் புயல்' போர்ச்சூழலை எமது பெண்போராளிகள் 1987இல் தென்மராட்சியின் கப்பூது கிராமத்தில் அனுபவித்தனர். (விழுதாகி வேருமாகி பக்கம், 12) அதே பெண்கள் டிசம்பர் 1999 - மே, 2000 காலப்பகுதியில் பரந்தன், ஆனையிறவில் சேற்றிலும் இடுப்பளவு நீரிலும் மிதந்தனர்.

1987-1990 காலப்பகுதியில் எமது பெண் போராளிகள் மணலாறு - வவுனியா காடுகளில் பெரும் உணவுத் தட்டுப்பாட்டைச் சந்தித்தனர். எதிரி விதைத்த கண்ணிவெடி வயல்களுக்கூடாக ஐம்பதுகிலோ எடையுள்ள அரிசி, பருப்பு, கோதுமை என்பவற்றைச் சுமந்தபடி எமது பெண்கள் கடினவாழ்வு வாழ்ந்தனர். வியட்நாம் போரின்போதும் இது போன்ற காட்சிகளை நாம் காண்கிறோம். 1954இல் நடைபெற்ற பிரெஞ்சு ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரான போரில் வியட்நாமியப் பெண்கள் இதேவகைப் பங்களிப்பைச் செய்தனர். டியன்பியன்பூ கோட்டையை வியட்நாம் படைகள் முற்றுகையிட்டபோது அரிசி மூடைகளையும் பல குழல் எறிகணைகளின் பாகங்களையும் பெண்கள் சுமந்து சென்றனர்.

பிரெஞ்சுப் படைகளின் வெளியேற்றத்தின் பின் அமெரிக்கப்படைகள் வியட்நாம் வந்துசேர்ந்தனர். அமெரிக்கர்களுக்கு எதிரான வியட்நாமியர் நடத்திய போர் 1975வரை நடைபெற்றது. அமெரிக்கர்களின் படுதோல்விபடுனான வெளியேற்றத்திற்கு வடக்கு வியட்நாமிலிருந்து தெற்கு வியட்நாம்வரை செல்லும் 1690கி.மீ நீளமான பாதையும் முக்கிய காரணங்களில் ஒன்றாகக் கூறப்படுகின்றது. இப்பாதை சீன எல்லையிலிருந்து கம்போடிய, லாவோஸ் எல்லைப் புறமாகச் செல்கின்றது. இது வியட்நாம் போராளிகளின் வழங்கற் பாதையாகவும் இரகசியத் தங்குமிடமாகவும் இடம் பெற்றது. கம்போடியா, லாவோஸ் காடுகளில் மறைந்திருந்த போராளிகள் இப்பாதையின் கிளைகளூடாகச் சென்று வந்தனர். இப்பாதையின் பெயர் ஹோசிமின் பாதை (HOCHI MINH TRAIL) இப்போது இது நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டு வருகின்றது.



இப்பாதை மலைகள், காடுகள், பள்ளத்தாக்குகள், பாறைக்குன்றுகள் ஊடாக அமைக்கப்பட்டது. இதை அமைத்தவர்கள் வியட்நாமியப் பெண்போராளிகள். இவர்கள் 'முன்னணிப் பெண்கள்' (VANGUARD WOMEN) என்று அழைக்கப்பட்டனர். ஐந்து வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாகப் பல்லாயிரக்கணக்கான இளம் பெண் போராளிகள் தமது கைகளால் இப்பாதையை உருவாக்கினர். கோடரி, சம்மட்டி, கடப்பாரை போன்ற சிறு ஆயுதங்கள் மாத்திரம் இவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர்களிற் பலர் மலேரியாவிற்கும் அமெரிக்க விமானங்கள் நடத்திய கம்பளவிரிப்புக் குண்டுவீச்சு மற்றும் நச்சப்பொருள் விசிறலுக்கும் உட்பட்டுப் பலியாகினர்.

அமெரிக்கர்கள் வீசிய குண்டுவல் ஒன்றாக இறந்த பத்து இளம் பெண்போராளிகளுக்கு லொங்டொக சந்தியில் (LONG DOC JUNCTION) அண்மையில் ஒரு நினைவாலயம் திறக்கப்பட்டுள்ளது. இப்பெண்களின் பத்துப் புகைப்படங்களும் இதில் வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் 1968இல் இறந்தவர்கள், எல்லோரும் இருபது வயதிற்குக் குறைந்தவர்கள். கடினமான உழைப்பின்போதும் இவர்கள் தமது உடற்தோற்றத்தில் கவனம் எடுப்பார்கள். 'போகெற்' என்ற நுரைக்கும் விதைகளைப் பயன்படுத்தித் தமது தலைமயிரைச் சுத்தம் செய்வார்கள். கிடைத்த நீரில் தமது ஆடைகளையும் உடலையும் இயன்றளவு நேர்த்தியாக வைத்திருப்பார்கள். இந்த நினைவாலயத்திற்கு வருவோர் இப்பெண்களின் படங்களுக்கு முன்னால் சீப்பு, பவுடர், வாசனைப் பொருள்களையும் புதிய ஆடைகளையும் படைக்கின்றனர். இந்த வழமை இப்போது சர்வதேச மட்டத்தில் கவனம் பெற்றுள்ளது. அத்தோடு பக்திபூர்வமாக சந்தனக் குச்சிகளையும் கொழுத்தி ஆராதிக்கின்றனர். அரைத்துவம் எய்திய பெண்களுக்கு இந்த நாடு செய்யும் அஞ்சலியின் தன்மை இதுவாகும்.

உலகு என்றுமே கண்டிராத போர்க்குணமும், நெஞ்சுரமும் அதிபுயர் கட்டுப்பாடுமுள்ள பெண் இராணுவமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண்போராளி அணிகள் திகழ்கின்றன. தரையிலும் கடலிலும் தாக்குதல் அணியாகவும் தற்காப்பு அணியாகவும் இவர்கள் இடம்பெறுகின்றனர். கனரக ஆயுதப்பிரிவு தொடக்கம் தொடர்பாடல் உள்ளடங்கலான கனமருத்துவம் வரையிலான துறைகளில் இவர்கள் திறமை வெளிப்படுகின்றது. எமது பெண்போராளிகள் பங்குபற்றாத தாக்குதல் நடவடிக்கையைக் காண முடிவதில்லை. காட்டுச் சண்டை, கடற்சமர், முகாம் தகர்ப்பு, எதிர்க்கோட்டை முற்றுகை, கடல்வழித் தரையிறக்கம் என்று புலிப் பெண்போராளிகளின் சாதனைப் பட்டியல் நீள்கின்றது. இவர்கள் காலடிபட்ட இடங்கள் வரலாற்றுச் சுவடுகளாக அமைகின்றன.

போரியலின் ஒரு முக்கிய அங்கம் வேவுப்பணி. நீண்டகாலப் போருக்கு இடையே தோன்றும் அமைதி இடைவெளி மிகவும் ஆபத்தானது இது போரியல் முதுமொழி. இரண்டாம் உலகப்போர் காலத்தில் பிரிட்டிஷ் அரசு நடைமுறைப்படுத்திய இரகசிய இராணுவப் புலனாய்வுத்துறை பற்றிய விபரங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. எதிரியின் முன்னிலை அரங்குகளை ஊடுருவிச்சென்று நாசகார வேலைகளையும் தகவல் சேகரிப்பையும் இந்த அணியினர் செய்தனர். இதில் பெருமளவு பெண்கள் தம்மை இணைத்துக்கொண்டனர். பலர் பிடிபட்டுக் கொல்லப்பட்டனர். உயிர்தப்பிய ஒரு பிரிட்டிஷ் பெண்ணின் சோகவரலாறு பத்திரிகை வாயிலாக வெளிவந்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சிலின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கிய விசேட நடவடிக்கை நிறைவேற்றுக் குழு (SPECIAL OPERATIONS EXECUTIVE - SOE) என்ற மேற்கூறிய அமைப்பின் உறுப்பினரான ஓடெற் ஹேலோஸ் (ODETTE HALLOWES) ஜேர்மன் படைகளால் கைது செய்யப்பட்டார். அப்போது ஓடெற் ஜேர்மன் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உளவுப்பணியில் ஈடுபட்டார். 1943இல் இவர் பிடிபட்டதாக இப்போதைய தகவல்கள் கூறுகின்றன. பதினான்கு தடவைகள் இவர் கடும் விசாரணைக்கு உட்பட்டார். அப்போது அவருடைய விரல் நகங்கள் பிடுங்கப்பட்டன. சூடேற்றப்பட்ட இரும்புக் கம்பியால் அவருடைய உடலில் காயம் விளைவிக்கப்பட்டது. தனது சகாக்களின் பெயர் விபரங்களை இவர் பிடிவாதமாகக் கொடுக்க மறுத்தார். தோல்வியடைந்த ஜேர்மன் விசாரணையாளர்கள் அவரை யூதர்களைக் கொலைசெய்யும் றேவனஸ்புறூக் முகாமுக்கு அனுப்பிவைத்தனர். அங்கு கண்ட கோரக்காட்சிகளால் புத்திசுவாதீனம் இழந்தார். 1945இல் அமெரிக்கப் படைகள் அப்பகுதிக்கு வந்தபோது அவர் மீட்கப்பட்டார். ஜோர்ஜ் குரொஸ் என்ற விருப்பதக்கம் அண்மையில்தான் அவருக்கு வழங்கப்பட்டது. தேகம் நலிவுற்றாலும் மனம் தளராமல் வயோதிப நிலையில் இப்போது அவர் வாழ்கிறார்.

எமது பெண்போராளிகள் சிங்களப் படைகளின் எல்லைப் பகுதிகளைக் கடந்து உட்புறம் நெடுந்தூரம் சென்று தகவல்கள் சேகரிக்கின்றனர். இத்தகவல்கள் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. பலர் இத்துறையில் உயிரிழந்துள்ளனர். தென் தமிழீழத்தில் வீரச்சாவடைந்த முதலாவது பெண்போராளியான அனித்தா 28, நவம்பர் 1988இல் எதிரியிடம் அகப்படாமல் சயனைற் உட்கொண்டு மரணத்தைத் தழுவினார். அப்போது தமிழீழத்தின் பெரும் பகுதி இந்திய ஆக்கிரமிப்புப் படையின்கீழ் கிடந்தகாலம். காட்டில் மறைந்திருந்த போராளிகளுக்கு மட்டக்களப்பு நகரிலிருந்து உணவு, மருந்து போன்றவற்றை அவர் எடுத்துச்செல்வார். அத்துடன் இராணுவ நடமாட்டம் பற்றிய தகவல்களையும் சேகரிப்பார். ஒருநாள் இந்திய இராணுவத்தினருடன் செயற்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் தேசவிரோதிகளால் இவர் அடையாளம் காணப்பட்டார். பிடிபடுவதற்கு முன் அவர் வித்துடலானார்.

தாயக மீட்புப்போரில் பெண்போராளிகளின் பங்களிப்பு அளப்பரியது. உலகப் பெண்ணினத்திற்கு அது மிகப்பெரியதொரு முன்னுதாரணமாக விளங்குகின்றது. தமிழீழப் பெண்போராளிகளின் தேசவிடுதலைக்கான அர்ப்பணிப்பும் உயிர்த் தியாகமும் பெண்பால் பற்றிய வழமையான கணிப்பீடுகளை மாற்றுவதற்குப் போதுமானவையாக அமைகின்றன.

**கலாநிதி க.சோமாஸ்கந்தா**







www.eelamview.com

(07ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய இலக்கொன்றை அழிப்பதன் தேவை கருதி, அவனது திறமையைக் கருத்திற்கொண்டு, அவனது புலனாய்வுப் பணி மன்னார்த் தீவினை மையப்படுத்தியதாக மாறியது.

'தீவு' என்றாலே போக்குவரத்துக்கான வழி கடல்வழியாகத்தான் இருக்கும். மன்னார்த்தீவு என்பது சில கிலோமீற்றர் சுற்றளவைக்கொண்ட சிங்களப் படையினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி அவர்களின் படைத்தளமாகவே விளங்கும் தீவாகும். தீவினைச் சூழவுள்ள கடல் பிரதேசங்கள் எங்கும் படையினரின் பிரசன்னங்கள், பாதுகாப்பு வேலிகள், காவலரண்கள். தீவிற்குள் தரையிறங்குவதற்கான பயணமே உயிரைப் பணயம் வைத்ததுதான்.

1996, அக்காலப்பகுதியில்தான் அவனது பயணமும், பணியும் தம்முடைய மக்கள் இருக்கிறார்கள் என்ற ஒரே நம்பிக்கையில் நிகழ்ந்துகொண்டிருந்தன. அமாவாசை இரவில் கடல் கொந்தளிப்பின் நடுவே, சிறுபடகுகளின் துணையுடன், படையினரின் இரு காவலரண்களுக்கிடையே அவனும் அவன் சகதோழன் கணேசும் இன்னும் பலரும் தரையிறங்குவார்கள்.

அன்றும் அப்படித்தான், தரையிறங்கிய சில மணிப்பொழுதில் படையினரின் துப்பாக்கிகள் சடசடக்கத் தொடங்க, படகினை ஓட்டிய ஓட்டி சுந்தரமணி ரவைபட்டு துடிப்பை இழக்க, தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாது, நாட்டுப் பற்றாளரான ஓட்டியின் உடலை நீருக்குள் இழுத்துச் சென்று 'கண்டல்காட்டுப் பகுதியில்' பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்து இரவு புலர்வதற்குமுன் படகேறிய இடத்திற்கே எடுத்து வந்தமை அவனது துணிச்சலுக்கப்பால், விடுதலையை நேசித்து, தாமும் களத்தில் நேரடியாய்ப் பங்கெடுக்க முன்வரும் 'ஆதரவாளர்' மீதான அவனது மதிப்பையே புலப்படுத்தியது.

தன் தேசவிடுதலையை நேசிக்கும், இன்னுமொரு நாட்டுப்பற்றாளன், அந்த இளம் வீரர்களை இன்னுமொரு கடற்பகுதியில், மன்னார்த்தீவில் தரையிறக்கத் தொடங்கினார்.

மன்னார் பட்டணத்துள் மக்களுடன் மக்களாய் அவர்கள் உருமாறியிருந்த புலனாய்வுச் செயற்பாட்டில் ஓர்நாள்...

தேனீர்க் கடையொன்றினுள் தன் பொறுப்பாளர் விநாயகத்துடன், தேநீர் அருந்திக் கொண்டிருக்க, தற்செயலாய்ப் படைப் புலனாய்வாளன் ஒருவன், திடீரென உள்நுழைந்து - அவர்களது இருக்கைக்கருகில் 'சிகரட்'டினை ஊதித் தள்ளிக்கொண்டிருக்க "எடுத்துச் சுடுவமா?" (கைத்துப்பாக்கியால் சுடுதல்) எனத் தன் பொறுப்பாளரிடம் பம்பலாய் அவன் கேட்க, அவர்களை நன்கு அறிந்திருந்த, கடைக்கார அம்மாவுக்கு முழி வெளியே வராதகுறை. அம்மா இன்னும் அதனை மறக்க முடியாதவராய்.

அவனது துணிச்சல் 'வெறும் துணிச்சல் அல்ல' விவேகத்துடன் கூடியதாகவே வளர்ந்திருந்தது.

அன்று, மன்னார் பட்டணத்தில் 'நகர்' சுறுசுறுப்படைந்திருந்த பட்டப் பகற் பொழுதில், சிங்களப்படை முகாம்களுக்கிடையே, பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த 'சாராயக்கடை' ஒன்றிற்கு இரண்டு சிங்களக் காவல்துறையினர் (police) துப்பாக்கிகளுடன் ஜீப் (Jeep) ஒன்றில் வந்திருந்தனர். அதில், ஒருவன் மது அருந்துவதற்காகக் கடைக்குள் செல்ல மற்றையவன், கடை முகப்பில் காவலுக்கு நின்றான்.

சுருளியில் வந்த அவன், அதனை நிதானமாக நிறுத்தி இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து, பதற்றமின்றி வைத்த குறியில், காவலுக்கு நின்றவன் சரிந்துவிழ, அவனது சாவினை உறுதிப்படுத்திவிட்டு, சாராயக்கடைக்குள் புகுந்து அங்கு மதுக்கோப்பையுடன் தள்ளாடிய மற்றையவனையும் சுட்டுவிட்டு சிங்களப் படையினரின் பாதுகாப்பு வியூகத்துக்கு 'தண்ணி' காட்டி, அவன் வெளியேறியிருந்தமை, மக்கள் மத்தியில் அவனைக் கதாநாயகனாகவும், படைப் புலனாய்வாளர் மத்தியில் 'எமது கடமை முடிய இன்னும் சில மாதங்கள்தான் இருக்கு - என்னை ஒன்றும் செய்ய வேண்டாம்' என்று கூறிவிடப்பட்ட அளவுக்கு பயப்பீதியையும் ஏற்படுத்தியிருந்தன.

**'முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம்' தன் மகனின் புகழுடலுக்கு இறுதியாய் வணக்கம் செலுத்திட, கண்ணீருடன் காத்திருக்கும் தந்தையிடம், 'ஐயா அழாதீங்கோ, உங்கள் மகன் பிறந்ததே போராடத்தான். அவன் இன்னுமொரு பிறவி எடுப்பான் கலங்காதீங்கோ." கலங்கிய படியே கூறிய பாதிரியாரின் உணர்வுகளுக்கூடாகவும் அவன் வாழ்வைப் பார்க்கிறேன்.**

அந்தக் குடும்பம், படையினரின் முழுமையான ஆக்கிரமிப்புப் பிரதேசத்தினுள் வாழும் மிகவும் 'வசதியான' குடும்பம். 'முகவர்' கட்டமைப்பினுள் வராத அவனது 'ஆதரவாளர்' பட்டியலுள் அக்குடும்பமும் ஒன்று.

அதிமுக்கிய புலனாய்வுப் பணிக்காக 'குடும்பத்தையே பணயம் வைக்கும்' உதவி ஒன்றிற்காக அவர்களை, அவன் நாடிச்செல்ல, "தம்பி, விடுதலைக்காக உங்களைக்கூட இழக்கத் தயாராய் நீங்கள் பணி செய்கிறீர்கள்... இதைக்கூட நாங்கள் செய்யாட்டி... உங்களுக்கு எப்போ தேவைப்படுகிறதோ அப்ப வந்து இதை எடுக்கலாம்" - அந்த ஆதரவாளரின் முடிவு. 'முகவர்' கட்டமைப்பினுள் வராத, விடுதலையை உளப்பூர்வமாக நேசிப்பவரை அவன் அடையாளம் கண்டிருந்தானா? உருவாக்கியிருந்தானா? என்ற கேள்விகளைத் தந்திருக்கின்றன.

மன்னார் தீவில், படையினரின் தொலைத்தொடர்புக் கோபுரம் தகர்ப்பு என அவனது தாக்குதல் நடவடிக்கைகள் நீழுகையில்,

அதிமுக்கிய புலனாய்வு இலக்கொன்றை வெற்றி பெறுவதற்காகவும் - அந்தச் செயற்பாட்டுக்காக அவனது பொறுப்பாளர் விநாயகமும், படையினரால்

அவனது புலனாய்வுப் பணியில், மேல்மட்டம், கீழ்மட்டம், தொழில், மதம் என்பவற்றுக்கப்பால் விடுதலையின் தேடல் விசைப் பெற்றிருந்தமைக்கு அவனால் அமைப்புக்குள் உள்வாங்கப்பட்ட போராளிகள் சாட்சி.

அவனது புலனாய்வுப் பணியில் போலி ஆவணங்களின் தேவை எத்துணை

விசேட தலைமையில் வந்த படையணி ஒன்றினால் வீடு சுற்றிவளைக்கப்பட, 'எங்கோ தவறு நடந்திருந்தமை தெரியவர' அவனும், அவன் தோழன் கப்டன் கணேசும் படுத்திருந்த அறையினுள் முதலில் உட்புகுந்த அர்ஜுன 'ரோச்'சை அடிக்க, வெளிச்சத்தை முந்திப்பாய்ந்த அவனது கைத்துப்பாக்கியின் ரவை அர்ஜுனவின் முழங்கால் சிரட்டையை உடைத்து, அவன் கீழே சரிய, கைக்குண்டொன்று அந்த அறைக்குள் வெடிக்கின்றது. அவனது முதுகுக்குப் பின்னால் படுத்திருந்த கணேஸ் மட்டும் எழும்பி வெளியே வரக்கூடிய நிலையில் காயப்பட்டிருந்தான். "மச்சான் நீ தப்பிப்போ என்னால் ஏலுமாயில்லை" என்ற அவனது இறுதி மூச்சின்முன் அவனது கைத்துப்பாக்கியின் வெடி அதிர்வொன்றும் கேட்டது. அவனது அசாத்திய துணிச்சல் படைப்பிரதேசத்தினுள் வாழ்ந்த பரிச்சயம், ஆட்டை அவனை இழக்கக் காரணமாகியதா?

'காட்டிக்கொடுப்பு' ஏ கவேசக் கண்டதும் 'வீல்வா' தப்பிவரவில்லையா? என்ற ஆதரவாளரின் துடிப்பிலும்,

"தம்பி, அவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையில் அவனுக்கும் சேர்த்து புதுவருசத்துக்கு உடுப்பு எடுத்திற்றன்" அவன் இன்னும் வாழ்கிறான் என்ற முகவரின், மறக்கமுடியாத நினைவிலும்,

"அன்று அவன் இல்லையென்றதும் கோயிலில் தவறவிடப்பட்ட பிள்ளைபோல ஆனேன்" என்ற அவனது பொறுப்பாளர் விநாயகம் அவர்களது, அவன் மீதான நம்பிக்கையிலும்,

"கோபப்படாமல், அதிகாரம் செலுத்தாமல், அன்பாக மக்கள் மனதை வெல்லும் அவனது பணிப் போக்கு, புலனாய்வுச் செயற்பாட்டாளர்களுக்கான முன்னுதாரணம்."

இன்றான பண்பாளரின் இயல்பாகவே அதிக துணிச்சல் இருப்பது அரிது - விதிவிலக்காக இவனிடம் அந்தத் துணிச்சலுமிருந்தது.



மறுபக்கத்தில் எதிரான புலனாய்வுச் முழுமையான ஆக்கிரமிப்பினுள் உள்ளாகியிருந்த மன்னார்த் தீவினுள் சென்று தவிர்க்க முடியாதபடி செயற்பட வேண்டிய தேவையின்றால் செயற்பட்டுக் கொண்டிருந்தமையாலும், தேவை கருதியும், பாதுகாப்புக் கருதியும் வலிந்த தாக்குதல்களை தவிர்க்கும்படி கட்டளையிடப்பட்டுமிருந்தது.

'அந்தப் புலனாய்வு இலக்கினை எட்டுவதற்காக - அவனது பணியில், எல்லா மதத்தவர், சமூகத்தவர் மத்தியிலும் களம் அமைத்தான்' ஆதரவாளன் ஒருவன் கூறியதுபோல, "சிலர் விடுதலைப் போராட்டத்திற்கு உதவி புரியாதவிட்டாலும், 'காட்டிக்கொடுப்பாளர்'களாக மாறிவிடாதபடி பார்த்திருந்தான்." அந்த நிலைதான் அவனது நிறைந்த செயற்பாட்டுக்கான பலவழிகளைத் திறந்திருந்தன.

அவனது புலனாய்வுக் கட்டமைப்பினுள், உள்வாங்கப்பட்ட முஸ்லிம் மக்களின் செயற்பாடுகள் நிறைவானவை, பெறுமதியானவை - மறைவானவை.

எதிரியால் கைது செய்யப்பட்டும், தான் கொண்டிருந்த மறைப்பினை, அதி இரகசியத்தை வெளிப்படுத்தாத 'சிற்றிசன்' எனப்படும் முகவர் 'எந்தச் சூழ்நிலையிலும் பிறழாத' அவனது முகவர் கட்டமைப்புக்கான சான்று.

முக்கியமானது எதையும் நன்கு உணர்ந்திருந்தான். - அதனால் பாதுகாக்கப்பட்ட முகவர்கள் ஆதரவாளர்களை அறிந்திருந்தான். பல மட்டங்களில் இருந்தும், அவனால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களினால் எட்டப்பட்ட புலனாய்வு வெற்றிகள் அதிகம்.

அவ்வாறும் அவன் தோழன் கணேஸ் உள்ளிட்ட பல போராளிகளின் பலவருட அர்ப்பணிப்புமிக்க உழைப்பினால்; அவர்களால் திட்டமிடப்பட்ட 'புலனாய்வு இலக்கு' வெற்றிகொள்வதற்கான தருணம் வந்தபோது "பொதுமக்களின் இழப்புக்கான வாய்ப்புக்கள் உள்ளன" என்ற கட்டளைபீடத்தின் மறுப்பின் காரணமாக, திட்டம் கைவிடப்பட, தொடக்கப் புள்ளியிலிருந்தே மீண்டும் உழைக்க வேண்டிய தேவை. அதற்காக உழைத்த கைகளினுள் மீண்டும் அவனும் ஒருவனாய்...

11.12.1998 அன்றைய புலனாய்வுப் பணிகளை நிறைவு செய்து மன்னார் செபஸ்தியார் கோவிலுக்கருகே ஒரு வீட்டில் தங்கியிருக்கையில் 'சனி விலேஜ்' (Shanny village) சிங்களப் படைமுகாம் பொறுப்பதிகாரி அர்ஜுன

செயற்பாடு கருதி தன் செயற்பாட்டினை அறிக்கைப் படுத்துதலிலும், ஆவணப்படுத்துதலிலும் - மற்றும், திட்டமிட்ட நேரான ஒழுங்கமைப்புக்குள் போராளிகளை வழிப்படுத்துதலிலும் காணப்பட்ட முதிர்ச்சியின்மை, அவனது குறைகளெனலாம்" என்ற புலனாய்வுப் பொறுப்பாளரின் பார்வையிலும்,

"எமது தாய்நாடு விடுதலைபெற வேண்டும், எம்மைப் பிணைந்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும். இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும். குருதி சிந்தித்தான் ஆகவேண்டும்" என்ற தலைவரின் சிந்தனையிலும்,

பின்னொரு நாளில் அவன் தேடிய இலக்கினை வெற்றிகொண்ட தியாகிகளின் அர்ப்பணிப்பிலும் அவனது வாழ்வு உன்னதமானது.

சி.மாதுளா.

ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...





www.eelamview.com

www.eelamview.com

# தொடரும் பயணங்கள்

[illegible]



[illegible]

**புரட்சிமாறன்**

# தீர்க்க முடியாத நோய்

தென்னிலங்கை
உறவுகளே
வணக்கம்...

முடிசூடும்
ஆசைகளால்
முடிவிழந்து தவிக்கிறது
உங்களகம்

நாலுபேர் பார்த்தும்
சிரிக்கின்ற வீடுபோல்
நாறிக்கிடக்கிறதுங்கள்
தேசம்

தேர்தல் நடத்தியே
தேய்ந்து போகிறது
உங்கள் வளம்

இரண்டு படகினில்
கால்களை வைத்தவன்
கதையாகிக் கழிகிறது
உங்கள் காலம்

எங்களுக்கானது
தருவது பற்றியே
இத்தனை காலமும்
இழுபறிப்பட்டவர்

தங்களிற்கானது
பெற்றிடும் வழியினைப்
பற்றிய முறுகலில்
இழுபறிப்படுகிறார்

மீண்டும் யானை
இருக்கையிலேறினால்
மதம்பிடிக்காமல்
இருக்கமட்டுமே
முடியும்
மற்றெதுவும்
செய்யமுடியாது
தவிக்கும்

கதிரை
கதிரையேறினால்
நாறிக்கிடந்த சேற்றுச்
சாக்கடைக்குள்
மலமும் கலந்து
மணக்கப்
போகிறது ·
முகரமுடியாது
உங்கள் மூக்கத்
திணறப்போகிறது

செக்கரைக்கும்
மாடாகவே
நீளப்போகிறதுங்கள்
அரசமுறை

அப்படியிருந்தும்

சமாதானம்
வரவேண்டுமென்பதை
வரவேற்கிறோம்
என்பதற்காய்
அதன
உயிர்வாழ்வில்தான்

உயிர்வாழ்கிறோமென்று
நீங்கள்
அர்த்தம்
கொள்ளவேண்டாம்

உங்கள்
பாராளுமன்றத்தை
யாராண்டு
கொண்டாலும்
பாழாகிப்போகாது
எங்கள் நிலம்

வானம் நீர்மணி
கொடுக்கும் · எங்கள்
பூமி நெல்மணி
விளைக்கும்
பட்டினி கிடந்து
நாங்கள்
பரிதவிக்க மாட்டோம்

மானம் மண்டியிடாது
வாழ
வாளெடுக்கும்
கூட்டமும் · அதற்குத்
தோள்கொடுக்கும்
சுற்றமும்
வீரம் விளைந்திறுகிய
மறச் சேனையும்
அறக்கொள்கையும்
எங்கள் தாய்நிலத்தில்
இன்னும் வாழ்கிறது

எங்கள் தலைவன்
போட்ட அணை
எம்மைப் பலமாகவே
பாதுகாக்கின்றது

உங்கள் நாட்டில்
பெய்த மழையால்
எங்கள் வீட்டை
வெள்ளமள்ளிய
காலமெல்லாம்
மலையேறிவிட்டது

உங்களின் தலைவர்கள்
எத்தனைபேர் ஒன்று
சேர்ந்தாலும்
எங்களையேதும்
செய்யமுடியாதென்பதையும்

ஒன்று சேராத உங்கள்
தலைவர்களால்
உங்களுக்கும் ஏதும்
செய்யமுடியாதென்பதையும்

புரிந்துகொள்வீராக..

ஆகவே
நாங்கள் நாடமைத்த
பின்னும்
நடைபெறும் · உங்கள்
நாட்டில்
இழுபறி நாடகங்கள்

திருத்த வேண்டியது
உங்கள் கடன்.

**செந்தோழன்.**



www.eelamview.com

www.eelamview.com

# அந்தப் பெருவெற்றியின் கதைகள்

மலைமகள்

ஊவென்றிரைகிறது காற்று. வெட்டைவெளி. கண்காணிப்புப் பணிக்காக குறிப்பிட்ட சில நாட்களாக வெட்டையில் நிலத்தடி அரண்களை அமைத்து மறைந்திருந்து, சுடும் துவாரங்களினூடே உற்று உற்றுப் பார்த்ததில் உப்புக் காற்று கண்களில் மட்டும் மோதியதில், எல்லோர் விழிகளுமே சிவந்து போயிற்று. கண்களை வெட்டி விழிக்கும் ஒவ்வோர் முறையும் கத்தி நுனி கீறுவதுபோன்ற எரிவு.

எல்லாம் தயார். ஓலியைக் கட்டுப்படுத்தும் பாகங்கள் சுழற்றப்பட்ட நிலையில் பேரிரைச்சலை எழுப்பியவாறு உழவு இயந்திரங்கள் முன்நகர, நாங்கள் பின்நகர்ந்தோம். இதைவிட ஒவ்வொரு மூவரும் அல்லது இருவரும் பனங்குற்றிகளை உருட்டிக் கொண்டு போனோம். வெட்டை வெளியில் படையினரின் துல்லியமான இலக்குகளாக நாம் மாறாதிருக்கும் பொருட்டுச் சிறிதுதூரம் பனங்குற்றிகளை உருட்டுவதும், அதன் மறைவில் படுத்திருந்து சுடுவதும், எழும்பி உருட்டுவதும், படுத்திருந்து சுடுவதும்...

பண்டிகைக்கால இரவுநேர வானத்தில் வெள்ளி விரிகள் பூப்பூவாய் விரிவதுபோல, சிவப்புநிற ஒளிர்வுகளாய் ரவைகள் வானில் கோலமிட்டன. அந்த இரவிலும் ஆனையிறவுப் படைத்தளம் தலையில் ஒளிவட்டம் சூடிய பூதமாக இந்தப் பெரு வெளியிலே படுத்துக்கிடந்தது.

இந்த ஆனையிறவைக் கைப்பற்றுவதற்குப் பனங்குற்றிகளையென்ன, மலைகளைக்கூட உருட்டத் தயாராயிருந்தோம். வெற்றிலைக்கேணியின் கரையிலிருந்து ஆனையிறவு நோக்கித் தரையிறங்கி நகர்ந்து வந்த ஒருபெரும் புயலை இரு கைகளால் தடுத்து அதன் வேகத்தைக் குறைத்தோம். ஆனையிறவை வெல்லமுடியாத கோபத்தோடு, கொதிப்போடு, வெஞ்சினத்தோடு நாட்பத்தொரு நாட்களின் பின் வெளியேறினோம். (இது நடந்தது 1991இல்) ஆனையிறவின் அருகிலேயே உலைவினோம்.

அது இயக்கச்சி. நடந்து நடந்து அலுத்துப்போன நிலையில் ஒரு தூரிகைக் கண்டுவிட்டோம். விழுந்தடித்து ஓடிப்போய் தூரவுக்குள்ளேயே குதித்திறங்கித் தண்ணீரைக் குடித்துவிட்டு மேலேறிப் பார்த்தால், தென்னந் தோப்பிடையே ஒரு குடில் தெரிந்தது. ஆள் நடமாட்டமெதையும் காணோம்.

பார்த்தென்ன செய்வது? விழுந்துகிடந்த தென்னை யோலைகளை இரண்டிரண்டாக இணைத்துப் பின்னி அதன்மேல் சரிந்து படுத்துவிட்டோம். தோப்பின் நிழல், வயிறு நிறைந்த தண்ணீர், இதமாக வீசிய காற்று இமைகளை மூடிவிட்டோம்.

கனவிலே ஒரு பெண்குரல் கடுமையாக ஏசுவது போலிருந்தது. விழித்துப் பார்த்தபோது உண்மையிலேயே ஒரு மூதாட்டி எங்கள் முன்நின்று ஏசிக்கொண்டுதானிருந்தார். யாரை எதற்காக ஏசுகிறார் என்று விழித்த நாங்கள், ஏச்சின் காரணம் புரிந்தபோது அடக்க முடியாமல் சிரித்துவிட்டோம்.

இரண்டு தென்னை ஓலைகளை இணைத்துப் பின்னி இறந்தவர்களின் உடல்களை வைத்துப் பாடையிலேற்றுவார்களாம். வாழுகின்ற வயதில் ஏன் பாடையிலேறி நாம் படுத்தோம் என்று கடுமையாக ஏசியவாறு குடிலினுள்ளே போனார் மூதாட்டி.

படுத்திருந்த நாங்கள் பாடையிலேயே எழும்பியிருந்தவாறு ஆளை ஆள் பார்த்தோம். நித்திரை வந்தால் கடுகொடென்ன இடுகொடென்ன எங்களுக்கு? வீழ்ந்த வீரர்களை எம்மருகே வைத்திருந்தபடி நாம் உறங்கிய நாட்கள் எத்தனை? அட, இந்த ஆனையிறவை முதன்முறை அடித்தபோதே வீழ்த்தியிருந்தால் பேழைகளோடு போனவர்களாயே நாம்? சொல்லவா முடியும்? சொன்னால் ஏச்சு இன்னமும் கடுமையாக விழவுங்கூடும். போனவேகத்திலேயே வெளியில் வந்த மூதாட்டியின் கைகளில் ஓலைப்பாய்கள்.

"பனாட்டு காச்சி வைத்துறத்துக்கொண்டு புதுசா இணக்கி வைச்சிருந்தனான். விரிச்சிட்டுப் படுங்கோ. பாடையில படுக்கிறமாம் பாடையில" வசைபாடினாயா தாயே வாழ்த்தல்லவா பாடினாய்.

* * *

ஊவென்றிரைகின்றது காற்று. கண்ணுக்கெட்டிய தூரமெங்கும் தண்ணீர்தான். சில இடங்களில் இடுப்பளவு. சில இடங்களில் மூக்களவு. இது 1997இன் ஆரம்ப நாட்கள். ஆனையிறவுப் படைத்தளம் தண்ணீரால் சூழப்பட்டுக் கிடக்கின்றது. யாழ் நெடுஞ்சாலை தவிர ஏனைய வழிகள் எதையும் படையினரால் பாவிக்கமுடியாது. எல்லாமே கடல்கொண்ட பூம்புகாராக நீரின் அடியில்.

நாங்கள் தண்ணீரால் நகர்ந்தோம். ஆனையிறவினுள் புகுந்தோம். ஒருநாள் முழுதும் சமர் நீண்டது. சமர் தொடங்க முன்பிருந்தே அவள் அந்தப் பாலத்தைத் தேடினாள். எதிர் நீரோட்டம் அவளை பின்னோக்கித் தள்ளிக்கொண்டிருந்தது. மிக அருகேதான் அந்தப் பாலம் இருக்கவேண்டும். ஆ, இதோ நெருங்கிவிட்டாள். நெருங்குவது அப்படியொன்றும் இலகுவான விடயமுமல்ல. நீருக்கடியிலும் மேலுமாக பாலத்தைச் சூழ கண்ணிகள், வாராக்கப்பட்ட கூனிக் கட்டைகள், முட்கம்பிச் சுருள்கள், எந்நேரமும் ஒளிருகின்ற தேடொளி இத்தனையும் கடந்து நெருங்கி... இந்தப் பாலம் மட்டும் தகர்க்கப்படுமானால், ஆனையிறவின் ஆட்லறிகள் யாவும் எம்மிடம். தகர்ப்பதில் இடையூறு உண்டானால் எமக்குமில்லை, எதிரிக்குமில்லை, தகர்க்க வேண்டியதுதான். வெடிமருந்துடன் நீந்தியவர்களின் கண்களில் அது இப்போது தெளிவாகத் தெரிந்தது. பாலமா அது? பூதம். எதிர்பார்த்து வந்ததைவிட மிகப் பிரமாண்டமானதாக, ஒன்றரை ஆள் உயரத் தடுப்புடன் மிகப்பலமாக இருந்த அந்தப் பாலத்தினூடே சோ என்ற இரைச்சலுடன் வந்த தண்ணீர் பூதமொன்றின் வாயிலிருந்து வருவது போலத்தான் தெரிந்தது.

அட சீ இந்த ஆனையிறவு ஒரு தடைமுகாமாக இருந்தபோது எத்தனைமுறை சிங்களப் படையினரின் பணிப்பின் பேரில் ஊர்திகளைவிட்டு இறங்கி பாலத்தின் மேலாக நடந்து போயிருந்தோம். அம்மா ஒரு புறமும் அப்பா ஒரு புறமுமாக கைகளைப் பிடித்து, ஏதோ எங்களை இந்த இராணுவத்திடமிருந்து தாம்தான் காப்பாற்றுவதுபோல அழைத்துப்போன வேளைகளில் ஒருமுறையேனும் இந்தப் பாலத்தைக் குனிந்து பார்த்திருந்தால்... எந்தப் பாடசாலை மாணவியுமே ஒரு பாலத்தைப் பின்னொரு நாளில் தான் தகர்க்க வேண்டிவரும் என்று ஒருபோதும் நினைத்திருக்க மாட்டாள். ஆட்லறிகள் தகர்க்கப்பட்டன. வெல்லமுடியாத கோபத்தோடும், வெஞ்சினத்தோடும் நாம் வெளியேறினோம்.

* * *

இது 1998இன் ஆரம்ப நாட்கள். இப்போதும் ஆனையிறவு தண்ணீரால் சூழப்பட்டுக் கிடந்தது. சமர் கிளிநொச்சியிலும் பரந்தனிலுமாக விரிந்திருந்தது. சமரின் வெற்றி கருதி ஆனையிறவினுள் கரும்புலிகளும் வேவுப் புலிகளும் தமது இடையறாத பணியைச் செய்தபடி.



ஊடுருவலை உணர்ந்து கொண்ட சிறிலங்காப் படையினர் இவர்களைத் தேடியபடி. இவர்கள் அவர்களுக்குத் தண்ணீர் காட்டியபடி. இடையிடையில் மோதல்களும் நடக்காமலில்லை.

விலகி விலகி பகைப் பிரதேசத்தினுள் வந்து விட்டிருந்தனர். பணி முடிந்து விட்டிருந்தது. எனினும் இனி வெளியேறுவதும் ஒரு பணியே. முதுகுப்பைகள் பாரமிழந்து போய்க் கிடந்தன. சில முதுகுப் பைகள் தவறியிருந்தன. நான்கைந்து நாட்களுக்கு மேலாக உணவில்லை. இரவாகிவிட்டது.

அது ஒரு தென்னந்தோப்பு. தோப்பிடையே ஒரு வீடு. அவள் கதவைத் தட்டினாள்.

"யாரது?"

"அது நாங்கள். புலிகள்"

"எங்களுக்கு ஒருத்தரையும் தெரியாது. போங்கோ."

என்ன செய்வது? எப்படியாவது இப்போது சாப்பிட்டால்தான் விடிவதற்குள் வெளியேற முடியும்.

"கதவைத் திறவுங்கோம்மா"

தடதடவெனக் கதவைத் தட்டினார்கள். கதவு திறந்தது. இராணுவச் சீருடை, காலணி, தலைக்கவசங்களுடன் தன்முன்னே நிற்பது சிறிலங்கா இராணுவம்தான் என்பதில் அந்த அன்னைக்கு எந்த ஐயமுமில்லை.

'நான் ஒரு பெண்புலி' என்று இவள் சொன்னாலும் யாரும் நம்பப்போவதுமில்லை.

அம்மாவை விலக்கிக்கொண்டு நேராகச் சமையலறைக்குப் போனாள். வீட்டினுள்ளே படுத்துக்கொண்டிருந்த மகன், மகள் எல்லோரும் திகைத்துப்போய் நின்றார்கள்.

சமையலறையினுள் சிறு பானையிலிருந்த சோறு, சட்டிகளிலிருந்த கறிகள் எல்லாவற்றையும் குழைத்து வெளியில் எடுத்துப் போய் முற்றத்திலிருந்து உண்டார்கள். கிணற்றடியில் எல்லாவற்றையும் கழுவி, சமையலறையினுள் மீளவும் வைத்துவிட்டுத் திரும்பியவளின் கைகளை அம்மா பற்றிக்கொண்டார்.

"கொஞ்சநேரம் நில்லுங்கோ பிள்ளையள், புட்டவிச்சுக் கறி வைச்சுத் தாறன். நான் ஆமியெண்டு நினைச்சுத்தான்..."

"இல்லையம்மா, வேண்டாம். இதே போதும். நாங்கள் போக வேணும். நீங்கள் சமைச்சுச் சாப்பிடுங்கோ. வாறம்" கண்கள் கலங்கக் கதவைத் தாளிட்டார் அம்மா.

* * *

இது 2000. யாருமே ஆனையிறவைப் பொருட்படுத்தியதாகக் காட்டிக்கொள்ளவில்லை. நீ இருந்தாலென்ன, இல்லாவிட்டால்தான் என்ன என்பதுபோல எல்லோரும் இத்தாவிலினுள் புகுந்து கொண்டோம். கரையோரமாகவும் காவலரண் கட்டி வைத்தோம்.

அரையிருள். கடற்கரை மணலில் குழிவெட்டிக் கொண்டிருந்தோம். ஒரு உருவம் எங்களைநோக்கி வருகை தந்தது. யாராக இருக்கும்? படையியல் உணர்வு சட்டென விழித்துக் கொண்டது. இன்னும் சிறிது நெருங்கியதும், அது ஒரு அன்னை என்பது புலனானது. ஒரு கையிலே வாளி, ஒரு கையிலே குவளைகள். அருகே வந்தார்.

"தேத்தண்ணியைக் குடியுங்கோ பிள்ளையள்" என்றார்.

கண்கள் கலங்கிவிட்டன எங்களுக்கு. நன்றி சொல்லவும் வாய் வராமல் தேநீரைக் குடித்தோம். ஆனையிறவைப் பிடித்தோம். விடுதலைப்புலிகள் ஆனையிறவை வென்றார்கள் என்றன செய்தி ஊடகங்கள். எங்கள் வீரமக்களும் அல்லவா வென்றார்கள்.



www.eelamview.com

www.eelamview.com

# உயிர்காக்கும் ஊர்திகள்

அவன் அந்த தற்காலிக கூடாரத்தின் உட்பகுதியைப் பார்த்தான். நண்பனொருவன் சுருண்டு படுத்திருந்தான். இரவு முழுவதும் ஊர்தி ஓடிவிட்டு சற்று முன்னர்தான் வந்து படுத்தவன்.

கூடாரத்திற்கு வெளியே வந்தான். ஊரவர்கள் ஊர்திகளின் சீர்செய்யக்கூடிய பிழைகளை இருந்த உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி திருத்திக் கொண்டிருந்தார்கள்.

அவன் அந்தக் களநிலைகளுக்கான ஊர்திப் பகுதியைப் பொறுப்பெடுத்தபோது இரண்டு ஊர்திகள் மட்டுமே ஓடக்கூடிய நிலையில் நின்றன. அவைகூட எப்போது ஓடாது வாழ்வை முடித்துக் கொள்ளுமோ என்ற நிலையிலேயே நின்றன.

முன்னணி நிலையிலிருந்து அறிவித்ததும் அம்பாகப் பாய அவை காத்திருந்தன. இந்த ஊர்திகள் விழுப்புண் அடையும் போராளிகளை களமருத்துவ வீட்டிற்கு எடுத்துச் செல்வது மட்டுமல்லாமல் தேவையான வேளைகளில் வெடிபொருட்களை ஏற்றி இறக்கவும், உணவு கொண்டு செல்லும் ஊர்திகள் பழுதடைந்தால் உணவு வழங்கவும் போகவேண்டியிருந்தன.

அவனும் அவனோடு கூடவே நிற்கின்ற போராளிகளும் ஊரவர்களும் எப்போதும் தயாராகவே இருப்பார்கள். மாதக்கணக்கில் வீடுகளுக்குச் செல்லாமல் ஊர்தி திருத்தப் பணிகளில் ஈடுபடும் ஊரவர்கள் ஒருபடி உயர்ந்தே தோன்றினார்கள். அப்படிப் பணியாற்றி வீரச்சாவடைந்த ஊரவர்கள் அவனின் மனக்கண்களில் வந்தார்கள்.

அந்தப் பணியில் ஈடுபடும் போராளிகளும் ஊரவர்களும் தொடர் எறிகணை மழையாக இருந்தாலும் ஒதுங்கி நிற்கமுடியாத நிலை. அவர்கள் சற்றுத் தாமதமானாலும் விழுப்புண் அடைந்த போராளிகளின் நிலை ஆபத்தாகிவிடும். என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களுடன் அந்த ஊர்திகளும் பல வீரவடுக்களைச் சுமந்தும் சளைக்காது அழைப்பிற்காய் காத்திருந்தன.

அவன் கூடாரத்தினுள் நுழைந்தான். முன்னணி நிலையின் குறித்த இடத்தைக் குறிப்பிட்டு அங்கு வரும்படி அறிவித்தார்கள். நண்பனை திரும்பிப் பார்த்தான். அவன் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனைக் குழப்ப விரும்பவில்லை.

ஊர்தியடிக்கு வந்தான். ஊரவர்களில் இருவரைக் கூப்பிட்டான். ஊர்திக்குள் தேவையான பொருட்களிருப்பதை உறுதி செய்துகொண்டான். ஊர்தி களநிலையை நோக்கி பறந்தது.

காட்டுவீதியின் இடையிடையே எதிரி ஏவிய எறிகணையில் மரங்கள் முறிந்து வீதியைத் தடைப்படுத்தியிருந்தன. அவற்றை வெட்டி அகற்றியபடி வேகமெடுத்தார்கள்.

ஒரு இடத்தில் பெரிய மரமொன்று வீதியைக் குறுக்கறுத்து விழுந்திருந்தது. அதை உடனும் அகற்றமுடியாத நிலை. வீதியைவிட்டு விலகினால் ஊர்தி சதுப்பு நிலத்தினுள் புதைந்துவிடும். சதுப்பு நிலத்திற்குமேல் கட்டைகளை வெட்டிப்போட்டு ஊர்தியைச் செலுத்தினான். 'வாழைப்பழத் தோல்' ரயர்கள் ஒரே இடத்தில் சுற்றின. அவனுக்கும் ஊரவர்களுக்கு மிருந்த பட்டறிவால் ஊர்தி வீதிக்கேறி மீண்டும் வேகமெடுத்தது.

விழுப்புண்ணடைந்த போராளிகளை ஏற்றிக் கொண்டு களமருத்துவமுகாம் நோக்கி விரைந்தார்கள். எறிகணைகள் துரத்திக்கொண்டிருந்தன. அவன் எதிரியின் எறிகணைக்கேற்பவும் விழுப்புண்ணடைந்த போராளிகளின் நலனிற்கேற்பவும் சாதுரியமாக ஊர்தியைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

மரமொன்றில் விழுந்து வெடித்த எறிகணையின் சிதிலங்கள் ஊர்தியை ஊடுருவி ஊரவர்களில் ஒருவனைப் பதம்பார்த்தது. அவனின் உயிர் கணப்பொழுதில் பிரிந்தது.

ஊர்தி களமருத்துவமுகாமை வந்தடைந்தது. விழுப்புண் அடைந்தவர்களையும் வீரச்சாவடைந்த ஊரவனின் வித்துடலையும் இறக்கினார்கள். அவர்களுடன் ஊர்தியும் குருதியில் குளித்திருந்தது. ◆



ஆ.ந.பொற்கோ

# பகிரப்படாத பக்கங்கள்

(04ம் பக்கத் தொடர்ச்சி)

PNG கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழ்ந்த 50,000 (40%) மக்கள் PNG அரசினால் கட்டுப்படுத்தப்படும் 49 "நலன்புரி முகாம்களில்" வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நகர்வுச் சுதந்திரம் கிடையாது என்பதோடு சித்திரவதைத் தொல்லைப்படுத்தல், பாலியல் வல்லுறவு உள்ளிட்ட கொடுமைகள் முதலியவற்றையும் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய வீடுகளையும் சொத்துக்களையும் போர் பறித்துக் கொண்டுள்ளது.

இதனோடு ஒப்பிடும்பொழுது BRA கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் மக்கள் காட்டில் இருந்து உற்பத்திகளை அடிப்படையாகக்கொண்ட தற்சார்பு கிராமங்களை அமைத்துத் தடைகளை எதிர்த்து போராடி வருகிறார்கள். பனிகுனா சுரங்கத்தின் ஊடாக, போகன்வில் பிரச்சினையோடு அவுஸ்திரேலியா மிகமுடியாமல் சிக்குண்டிருக்கிறது. அவுஸ்திரேலிய படைய புலனாய்வு பிரிவின் ஆலோசனைப்படி PNG அரசு இரு முக்கிய நோக்கங்களுடனான படைய முற்றுகையை கைக்கொண்டது. இதில் முதலாவது, போகன்வில்லை உலகின் ஏனைய பகுதிகளில் இருந்து தனிமைப்படுத்தல். இது ஊடகத் தடைகளால் சாதிக்கப்பட்டது. மத்திய போகன்வில்லில் வாழும் மக்களுக்கு மருந்துகள், எரிபொருள், மனிதநேய உதவிகள் கிட்டாமல் தடுத்து அவர்களை அடிபணியவைக்கும் விதத்தில் இத்தடைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான உரிமைமீறல் நீதியை போர்முறையானது அவுஸ்திரேலியா, பப்புவா நியூகினியா ஆகிய இரண்டிலும் ஒப்பமிட்டுள்ள சகல சர்வதேச உடன்பாடுகளையும் மீறுவதாகும். மனித உரிமை அமைப்புக்கள் போகன்வில் செல்வதும் தடைசெய்யப்பட்டிருந்தது. இந்த மனித உரிமைமீறல்கள் பற்றி அவுஸ்திரேலியாவும் பெரும் மௌனம் சாதித்து வந்தது.

இரண்டாவது நோக்கமாக படைய நடவடிக்கைகள் மற்றும் வன்செயல் மூலமாக பனிகுனா சுரங்கங்கள் உள்ள போகன்வில்லை மீளக்கைப்பற்றுவது இருந்தது.

1997ஆம் ஆண்டில், PNG பிரதமரான சேர். ஜூலியஸ் சான் (SIR. JULIUS CHAN) போகன்வில்லில் இருந்த PNG படையினருக்குத் தலைமைதாங்க கூலிப்படையினரை அமர்த்தினார். பிரித்தானியாவில் இருந்து செயற்படும் சான்ட்லைன் இன்ரநசனல் (SANDLINE; INTERNATIONAL) என்ற நிறுவனம் முப்பத்தி மூன்று மில்லியன் டொலர் கொடுப்பனவில் அமர்த்தப்பட்டது. அவர்கள் ஆபிரிக்காவின் துர்ப்பெயர்பெற்ற தனியார் இராணுவங்களில் ஒன்றான எக்ஸிகியூட்டிவ் அவுட்கம்ஸ் (EXECYTUVE OUTCOMES) ஐ இதற்கென ஏற்பாடு செய்தார்கள்.

இவ்வுபாயத்தை வகுத்துக்கொண்ட பிரிக்கட் ஜெனரல் வழங்குதல், பயிற்சி, ஆலோசனைகளை அளித்தல் முதலியவற்றை கூலிப்படையினர் செய்யவிருந்தார்கள். இது போகன்வில் நெருக்கடிக்கு ஒரு முடிவுகாணும் என சான் நம்பினார்.

ஆனால் PNG பாதுகாப்பு படைகளின் தலைமையான பிரிகேடியர் ஜெனரல் ஜெறி சிங்கிறொக் (BRIGADIER GENERAL JERRY SINGIROK) கூலிப்படையினரை பகிரங்கமாக கண்டனம் செய்து அவர்களை கைதுசெய்யவும் வெளியேற்றவும் உத்தரவிட்டார். இதன் காரணமாக அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு அவர்மீது அரசத்துரோகக் குற்றச்சாட்டும் (SEDITION) சுமத்தப்பட்டது. அவரோ தனது படையினரில் அநேகமானோருடன் அரசசார்பற்ற செயற்பாட்டுக் குழுக்களில் இணைந்துகொண்டு கூலிப்படையினரை அமர்த்துவதற்கு எதிராகப் போராடினார். மார்ச் 16-26 வரை வீதிப்போராட்டங்கள் இடம்பெற்றன. சான் இறங்கிவந்து கூலிப்படையினரின் ஒப்பந்தத்தையும் முறித்துக்கொண்டார்.

PNG இன் தேசிய தேர்தல்கள் 1997 யூன் மாதம் இடம்பெற்றன. தேசியகொங்கிரஸ் கட்சியை சேர்ந்த புதிய பிரதமரான பில் ஸ்கேற் (BILL SKATE) அரசு ஊழல்களை எதிர்க்கும் போராடுவதையும் போகன் வில்லில் அமைதியை ஏற்படுத்துவதையும் தனது முக்கியப் பணிகளாக அறிவித்தார்.

**பேர்ண்காசல் உடன்பாடு**

1997 யூலை மாதத்தில், போகன்வில் பிரச்சனையில் தொடர்புபட்ட பல தரப்புக்களும் நியூசிலாந்தில் உள்ள பேர்ண்காசல் படைத்தளத்தில் சந்தித்தன. இந்த சந்திப்பில்

i) போகன்வில் புரட்சிகர இராணுவம் - BRA

ii) போகன்வில் இடைக்கால அரசு - BIG



கப்டன் லூயிஅன்ரன் டி போகன்வில்

iii) PNGசார்பு - போகன்வில் இடைமாறு அரசு - BTG

iv) போகன்வில் எதிர்ப்பியக்கம் - BRI

ஆகிய அமைப்புக்கள் பங்குகொண்டு போகன்வில்லில் அமைதியை ஏற்படுத்தும் உடன்பாடொன்றைச் செய்துகொண்டன. PNG அரசு இதில் பங்குகொள்ளவில்லை. சுமுகமான நல்லெண்ணச் சூழலில் இடம்பெற்ற இச்சந்திப்பில் போகன்வில்லில் அமைதியை ஏற்படுத்த உழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த முயற்சியில் யுத்தநிறுத்தம், படைத்துறை முற்றுகையை முடிவுக்கு கொண்டுவருதல், போகன்வில்லில் இருந்து படைகளை விலக்குதல், அமைதிபேணும் படையொன்றைக் கோருதல் முதலியவற்றை உள்ளடக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 1998 ஏப்ரல் 30ஆந் திகதி போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. பிரச்சினையில் தொடர்புபட்ட அனைத்து தரப்புக்களும், அதாவது, PNG அரசு, BIG, BRA ஆகியவை இதில் ஒப்பமிட்டு அமைதி முயற்சிகளில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தின. ஆயிரக்கணக்கான போகன்வில் மக்களும், பிஜி, வனுவாட்டு, சொலமன் நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இதனை நேரில் அவதானித்தனர்.

கடந்திலையைத்தையும் எவரும் தடுக்கமுடியாத சுதந்திரத்தையும் பெறுவதற்கான முதல்படியாக போகன்வில் மக்கள் இதனை கருதினர். இந்தப் பேச்சுக்கள் ஒன்பது வருடகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தன.

**ஐந்துவருட பேச்சுவார்த்தைகள்.**

1998 ஏப்ரல் 30ஆந் திகதி செய்துகொள்ளப்பட்ட பேர்ண்காசல் உடன்பாட்டுக்குப்பின் 2001 ஓகஸ்டில் போகன்வில் சமாதான ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட அடிப்படை உடன்பாடு ஒன்று எட்டப்பட்டது. 2002 ஜனவரி 23ஆந் திகதி அடுத்த பத்து வருடங்களுள் முழுமையான சுதந்திரத்துக்குக் குறைவான சுயாட்சியை போகன்வில்லுக்கு வழங்க வழிவகுக்கும் அரசியலமைப்பு திருத்தம் PNG நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பல நாட்கள் நீடித்த நிச்சயமற்ற நிலைமைகளுக்குப் பின்பு சட்டமூலத்தில் மூன்றாவது வாசிப்பு மார்ச் 22ஆந் திகதி நிறைவேற்றப்பட்டது. இந்த நாட்களில் நிலவிய தடங்கல்கள் போகன்வில்லை மீண்டும் போருக்கு திரும்பும் மனோநிலைக்குள் கொண்டு போயிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

2002 மே 5ஆந் திகதி 'த காடியன்' பத்திரிகைக்கு மோசஸ் ஹாவினி (MOSES HAVINI) அளித்த பேட்டியில், பல முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

* IMF, ADB போன்ற நிதி வழங்குனர்களிடமிருந்து உதவிகளை பெற்றால் அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்படவேண்டியிருக்கும். எனவே முடிந்த அளவுக்கு தவிர்த்துக் கொள்ளப் போகிறோம். கிழக்குத்தீமோர் இதற்கு நல்ல உதாரணம். அங்கு இடைமாறுகால நிர்வாகத்தை (TRANSITIONAL ADMINISTRATION) பேர்கொண்ட ஐக்கிய நாடுகள்சபை ஏற்கனவே ஒரு புதிய - குடியேற்றவாத எசமானர்கள்போல் நடத்துகொள்ளத் தொடங்கியுள்ளது.

* முற்றுகைகள், தடைகளினால் போகன்வில் மக்கள் பெற்ற பாடங்கள், அவர்களுடைய உயிர் பிழைத்திருக்கவை முதலியவை அவர்களைக் கடும் உழைப்பாளிகளாக ஆக்கிவிட்டிருப்பதால் போகன்வில்லை மீளக்கட்டியெழுப்புவதில் அவர்களை உறுதியோடிருக்கச் செய்திருக்கிறது.

* ஊழல் தடுப்பு பொறிமுறைகளை ஆரம்பத்திலிருந்தே ஏற்படுத்த எமது தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.

* கூட்டாட்சி அரசு பத்துவருடம் செயற்பட்ட பின் சுதந்திரத்துக்கான கருத்துக்கணிப்பு இடம்பெறும்.

* போகன்வில் தனது சொந்த பொலிஸ் படையை கொண்டிருக்கும். இராணுவம் ஒன்றுபற்றி இப்போது அக்கறைப்படத் தேவையில்லை.

* சுயாதீனமான நீதி நிர்வாகத் துறையும் இருக்கும்.

* போகன்வில்லுக்கான வரவு-செலவுத்திட்டத்தை PNG அரசே வகுக்குமென்றும் PNG அரசு இன்னமும் அவுஸ்திரேலியாவிடமிருந்து வருடாந்தம் 300மில்லியன் டொலர்களை உதவியாக பெற்றுக்கொண்டிருப்பதைக் கருத்தில்கொண்டு முடிந்தளவு விரைவில் வேறே சர்வதேச உதவித்தொகையில் தங்கியிருப்பதை தவிர்க்க முயற்சி செய்யப்போகிறோம்.


எனினும் இவர்களது எதிர்பார்க்கைகள் பொய்த்துப்போன நிலையிலே அமைதிச் செயற்பாடுகளில் இருந்து விலகியுள்ளபோகன்வில் அமைப்புக்கள் மீண்டும் தங்கள் விடுதலைப்போரை முன்னெடுத்துள்ளன. அமைதிச் செயற்பாடுகள் முறிவடைந்தமைக்கான காரணங்கள் தெளிவான முறையில் வெளிவரவில்லை. எனினும் அந்தச் சிறியதீவு விரைவில் விடுதலை அடையப் பிரார்த்திப்போம்.

\- வி.அருளாளன் -



www.eelamview.com

www.eelamview.com



# தேசியப்பற்றையும், விளையாட்டில் மேன்மையையும் உருவாக்கும் தமிழீழ விளையாட்டுத்துறை

[illegible]



[illegible]

- அன்ரன் அன்பழகன் -

(03ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] (Sword of Damocles - [illegible]) [illegible]



www.eelamview.com

www.eelamview.com

அந்த நிலங்கள் மீண்டும் நெல்மணிகளை விழுங்கிக் கொண்டு திருக்காக ஏங்க ஆரம்பித்துவிட்டன. இவ்வளவு நாளும் வெறும் புற்களையே பிரசவித்துக் கொண்டிருந்த அந்த நிலங்களைக்கு இப்போது குதூகலம். இடையிடையே முளைவிடும் குடிசைகளும் வீடுகளும் அந்த நிலத்தை இன்னும் குளிரவைப்படுத்தும். அங்குள்ளவர்கள்



# உடும்பன்குளம்

சுறுசுறுப்பானவர்கள். அவர்கள் எப்போதும் இயங்கிக்கொண்டே இருப்பார்கள். கைகளில் கலப்பைகளும் விதைப்புக்கான நெல்மணிகளுடனும் மனதில் தெம்புடனும் நடக்கிறார்கள் அவர்கள். இறந்தகாலத்தோடு ஒட்டிப்பிறந்த அந்தக் கிராமம் இப்போது புதுக்களை பெறத்தொடங்கிவிட்டிருக்கின்றது.

அதுதான் மதுரக்கை எல்லைப்புற மாவட்டமான அம்பாறையின் உடும்பன்குளம் கிராமம். எப்பொழுதும் விவசாயத்தை நம்பியதானது உடும்பன்குளம். அதற்காகவே அங்கு வாழ்பவர்கள் வாழப்பழகிக் கொண்டார்கள். தமிழீழத்தில் எல்லைப்புறமாக இருந்தது அதற்கு ஒரு சாபக்கேடோ என்பது போல, அது எப்பவுமே கலவரம்படும் கிராமமாக இருந்தது. இந்நிலை எண்பதுகளின் பின்நாளிலேயே ஏற்பட்டது.

வளம்மிகுந்த தமிழ்க் கிராமங்கள் பல அழிக்கப் படுவதும், அங்கிருப்பவர்கள் விரட்டப்படுவதும் பன்னாளில் அதிகரிக்கத் தொடங்கியது. அப்போதய ஆட்சியாளர்களுடன் இணைந்து சிங்கள, முஸ்லிம் இனவெறியர்கள் சிலருடன் அரங்கேறிக் கொண்டிருந்தது இந்த நிகழ்வு. ஏலவே பல அயற்கிராமங்கள் பலியாகிப் போக அப்போதும் உடும்பன் குளமும் குறிவைக்கப்பட்டது இனவாத பேய்களுக்கு பலியாக.

வழமை போலவே சிங்களப் படைகள் சுற்றி வளைப்பதும் அங்கிருப்பவர்கள் பிடித்துச் செல்லப்படுவதும் சித்திரவதைகளின் பின்னர் விடுவிக்கப்படுவதும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பகல் முழுவதும் வயல்களிலேயே நிற்கும் அந்த ஏழை விவசாயிகள் சிங்களப் படைகளுக்கு எதிராகவோ, தமக்கு எதிராக சதித்திட்டமிடும் ஒருவேளை கொண்ட ஒரு சில முஸ்லிம் தலைவர்களுக்கு எதிராகவோ எதுவுமே செய்ய திராணியற்றிருந்தனர்.

வயல் வெளிக்குள் உடும்பன் குளத்தையும் அழிக்க திட்டமிட்டது அதிகாரப் படையுடன் கைக்கூலிகளும் இணைந்து அந்த நாளுக்காக அவர்கள் காத்திருக்கத் தொடங்கினர். 1986ஆம் ஆண்டு மாசி மாதம் பத்தொன்பதாம் திகதி உடும்பன் குளத்தின் வயல்கள் மீண்டும் சிங்களப்படைகளின் இராணுவ காவலரண்களால் நிறையத் தொடங்கின.

காலைப் பொழுது வயல்களில் அறுவடை நடக்கும் காலம் அது. வெட்டிய கதிர்கள் சூடுகளாக வைக்கப்பட்டு ஒருபக்கம், சூட்டு நெற்கள் அடிக்கப்படும் சூட்டுக்களங்கள் ஒருபக்கம், கட்டுவைக்கப்பட்ட உப்பட்டிகள் ஒருபக்கமென களத்திருந்த வயல்வெளியில் கிராமத்து மக்களும் களத்தே இருந்தனர். நீக்கல் கொட்டிய நெற் விளைவை அட்டவீட்டுக் கொண்டவர்களால் பதுங்கியிருந்த கொலைபடையை அடையாளம் காணமுடியவில்லை.

"திடீரெண்டுதான் அங்காலப் பக்கமிருந்து படையா ஓடி வாறானுகள். ஆர் எவரெண்டு பாக்கிறத்துக் கிடையில சுற்றிக்கொண்டு வந்தவங்கள் மாடுசாய்ச்ச மாதிரி எல்லாரையும் ஒன்றாக்கிகலைச்சிட்டு வாறானுகள் எங்கட சியாமளாண்ட அப்பா நிண்டவர். அவர் எப்பவும் பகிடியாச் சொல்லுவார்! கொமாண்டஸ் எதுவந்தாலும் எனக்குப் பயமில்லை. அடுக்க அடுக்க காறுக்க புகுந்து ஒருவனையாவது கொல்லுவேன் எண்டு. ஆனா அப்பபாத்தா எல்லாரையும் ஏண்டாவென்று போறானுகள்" என்றார் சம்பவத்தில் உயிர் தப்பிய பெண்மணி ஒருவர்.

பதுங்கியிருந்த சிங்கள கொலைப்படைகள் வயலில் வேலை செய்துகொண்டிருந்த அனைவரையும் ஒன்றாக கூட்டினர். அவர்களை வயலருகிலிருந்த திறவல் பாதைக்கு விரட்டினர். ஆண்களை ஒன்றாக்கி இருவர் இருவராக பிணைத்துக் கொண்டனர். அவர்கள் முன்னாலேயே பெண்கள் பலர் காட்டுக்குள் இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்களின் கதறல் ஒலி அடங்குமுன்னரே ஆண்களனைவரும் சுட்டுக் களத்திற்கு ஏற்றி விரட்டப்பட்டனர். சூடு அடித்து ஓய்ந்திருந்த உழவுயந்திரங்கள் மனிதச் 'சூடு'களை ஏற்றிவந்து குவித்திருந்தது.

"அந்த நேரத்தில ராணுவம் வந்தாலும் வரச்சு இருந்து பாத்திட்டு போனது ராணுவம்வந்து பிடிச்சாலும் விட்டுவிட்டு போனதுதான் இப்படியே சுட்டுப்போட்டு போவாங்களெண்டு தெரியாதுதான். அதனாடி சனங்கள் ஓடல்ல. அப்படியே சூடுவச்சாப்போலயும் உப்பட்டி சமந்தாப்போலேயும் முடிச்சிட்டான்" என்றபடியே கவலையப்பிப்போனார் ரட்ணம் என்ற விவசாயி.

உடும்பன்குளத்திலிருந்து அனைவரையும் அன்றோடு விரட்டிவிடவேண்டும் என்று கங்கணங்கட்டி ஆடியது சிங்கள கொலைப்படை. சுட்டுக்குவிக்கப்பட்ட ஆண்கள் எல்லோர் மேலும் துப்பாக்கி ரவைகள் சீறிப்பாயத் தொடங்கின. உயிரைக்காக்க கடைசிக் கதறல்கள் அங்கே ஒலித்து தேய்ந்துபோக உடும்பன்குளமே வயல்களில் ஆங்காங்கே தீ மூட்டத்தொடங்கியது.

"பத்தவச்ச சூட்டுக்குக்கிட்டவா ஆக்கள கொணந்து குவிச்சாங்கள் மறுகா காலியையும் கையியையும் தூக்கி தூக்கி போட்டாங்கள். ஒவ்வொரு சூடும் திகர் திகர் எண்டு எழும்பிப் பத்துச்சது பிறகு ஒரு பொம்பிள வந்தவ 'சின்னமக்கு' எண்டு அவவுக்கு அவங்க செஞ்ச சித்திரவதையெண்டா சொல்லவேயேலாது. சமைச்ச குளம்பு கறி எல்லாத்தையும் ஊத்தி... சிரட்டால சுட்டு.. பிறகு அவவையும் கொணந்து எங்களோட போட்டாங்கள்."

என்றபடி முகத்தை பொத்திக் கொள்கிறார் கையும் கண்ணீரை மறைக்க அந்தப் பெண்மணி. சம்பவத்தை நேரில் பார்த்தவர்களில் அவரும் ஒருத்தி.

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் எல்லோரையும் சூடுகளில் போட்டு எரித்தும் அந்த விவசாயிகளின் குடிசைகளை சூறையாடியும் அங்கிருந்த பெண்களை அடித்தும் சித்திரவதைகளை செய்தும் முடித்துவிட்டிருந்த சிங்களக் கொலைப்படை வெளியேறத் தயாரானது. இது உங்கள் நிலமல்லவும் இனி இங்கிருக்க நாங்கள் விடமாட்டோம் தொடர்ந்து இங்கிருந்தால் இதே கதிதான் தொடரும் என்றெண்ணிக்க அறுவடைக்கு பேர்பட்ட உயிர்களை கொன்றழித்தும் வயல் சொத்துக்களை எரித்தும் ஆக்கிரமிப்பின் அடையாளம் பொறித்துச் சென்றன அன்று சிங்களப்படையும் இணைந்த கைக்கூலிகளும். உடும்பன்குளம் அன்றுடன் வற்றிய போய் விட்டது. அங்கு குளத்திலே நீர் நிறைந்தாலும் உடும்பன்குளம் பின்னர் நிறைவடையவே இல்லை.

தூரம் நடந்தேறி பதினெட்டு ஆண்டுகள் கழித்து உடும்பன்குளம் நிறைவடையத் தொடங்குகின்றது. மீண்டும் அங்கு கிளிகளின் சத்தங்களும் வயலின் சலசலப்பும் கேட்கத் தொடங்கிவிட்டது. அங்கே தூரத்தப்பட்டவர்களே அன்று கொல்லப்பட்டவர்களுக்காக தூபி எழுப்பத்தொடங்கியுள்ளார்கள். அவர்களின் நினைவுடனேயே வயல்களும் பூத்துக் குலுங்குகின்றன. அவர்களின் குருதியுறைந்த நிலமல்லவா அது.

இன்று அவர்களை எவரும் விரட்ட முடியாது ஆக்கிரமிப்பின் சின்னத்தை அழைப்பு முடியாது. அழைத்தால் ஆயிரம் கைகள் எழும் என்பதும் ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தெரிந்துவிட்டது. "எந்த கொமாண்டன் வந்தாலும் பயப்பட மாட்டம் மறுபா அவங்களை ஒருக்கா பாக்கவேணும் போல கிடக்கு" என்கிறார்கள் உடும்பன் குளத்தில் ஓடிவிளையாடும் சிறுவர்கள்.






விதுரன்

1 ம் பக்கத் (தொடர்ச்சி)

அரசியல் கடப்பாடு தமிழீழ மக்களுக்கு உண்டு.

நீண்டகாலமாக சிங்கள அரசு தவறான கருத்தியல் பிரச்சாரத்தைக் கட்ட விழ்த்து விட்டுள்ளது. புலிகள் வேறு மக்கள் வேறு என்று உலக சமூகத்திற்குப் பிரித்துக் காட்டி தமிழ்மக்களுக்கும் புலிகளின் அரசியல் இலட்சியத்திற்கும் சம்பந்தமில்லை என்று பொய்கூறி வந்துள்ளது. இந்த பொய்யான கருத்தியலுத் தாக்கம் சர்வதேச சமூகத்தையும் தொற்றிக் கொண்டுள்ளது.

புலிகள் இயக்கம் தலைமையேற்று வழி நடாத்திவரும் தமிழரின் விடுதலைப்போராட்டத்திற்கு மக்கள் ஆணை உள்ளதா! என்று சர்வதேச சமூகமும் பரிசோதனை செய்துபார்க்க விரும்புகின்றது.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல சிங்களத்தின் நயவஞ்சகக் கருத்தியலை முறியடிக்கவும் சர்வதேச சமூகத்தின் விருப்பத்தை பூர்த்தி செய்யவும் இந்தத் தேர்தலைப் பயன்படுத்த புலிகள் இயக்கம் முடிவெடுத்துள்ளது.

இந்தத் தேர்தல் வாயிலாக புலிகள்தான் மக்கள் - மக்கள்தான் புலிகள் என்ற அரசியல் யதார்த்தத்தை தமிழ்மக்கள் தமது தீர்ப்பாக வழங்க வேண்டும். அதன்பின்னர் தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்குக் குறுக்கே சிங்கள அரசு இருக்க முடியாதுபோகும். சர்வதேச சமூகமும் சாட்டுக்கள் சொல்லமுடியாது போகும். அத்துடன் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு தமிழரின் அரசியல் பலம் உச்சத்தைத் தொடும். அந்த உச்சநிலையைப் பயன்படுத்தி அரசியல் காய்களை நகர்த்தி தமிழரின் அரசியல் இலட்சியத்தை வென்றெடுக்க புலிகள் இயக்கம் முயற்சிசெய்யும். சிங்கள நாடாளுமன்றுக்கு பிரதிநிதிகளை அனுப்பும் வழமையான பொதுத்தேர்தலைப்போல இந்தத் தேர்தலை தமிழ்மக்கள் எண்ணக் கூடாது.

இது சிங்கள அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழ்மக்கள் வழங்கப்போகின்ற மக்கள் ஆணைக்கான வாக்களிப்பு. தமிழரின் அரசியல் அபிலாசைகளைப் பெறுவதற்கான கருத்துக்கணிப்பு.

1977 ஆம் ஆண்டிலும் இதே போன்றதொரு மக்கள் ஆணையை தமிழ் மக்கள் வழங்கியிருந்தனர். ஆனால், அந்த ஆணையை சிங்களமும் பொருட்படுத்தவில்லை, சர்வதேசமும் கருத்தில் எடுக்கவில்லை. ஏனெனில், அந்த மக்கள் ஆணைக்கு தார்மீக பலம் மட்டுமே இருந்தது. வெறும் தார்மீக பலத்துக்கு மதிப்பளிக்கும் மனித மாண்பு சிங்களத்துக்கு இல்லை, சர்வதேசமும் அதைப்பற்றி அவ்வளவாக அலட்டிக்கொள்வதில்லை. அரசியல் உலகைப் பொறுத்தவரையில் தார்மீக பலம் என்பது வெறும் அலங்கார சொல்தான்.

ஆனால், இன்று தமிழினம் மாபெரும் இராணுவ பலத்துடன் திகழ்கின்றது. இந்த நிலையில் வழங்கப்படும் மக்களாணையை அனைத்துத் தரப்பினரும் கவனத்தில் எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவர். ஆயுதபலத்துடன் இணைந்த தார்மீகபலம் தமிழினத்திற்கு பலமான அரசியல் எதிர் காலத்தைக் கொடுக்கும்.


எனவே, ஏப்ரல் 02 ஆம் திகதியை தமிழ்மக்கள் ஒரு முக்கிய நாளாகக் கொள்ள வேண்டும். அது தமிழரின் அரசியல் அபிலாசைகளை உலகறியச் செய்விக்கும் கருத்துக் கணிப்பிற்கான நாள். அன்றைய நாளில், வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வீடு சின்னத்திற்கு வாக்களிப்பதை ஒரு தேசியக் கடமையாக தமிழ்மக்கள் கொள்ளவேண்டும். தமிழரின் அரசியல் விடுதலைக்கான ஒரு மக்கள் ஆணையாக அது நோக்கப்படும். ●


www.eelamview.com

www.eelamview.com







# எவருக்கும் குனியாத தலையாகி... எதுவரினும் பணியாத நிலையாகி...

வியாசன்

சாவுச்சிலந்தி இழைபின்னக் கிடந்தோம் நேற்று
அப்போதும் அசையா மலையாய்.
பசியே நிரம்பிய வயிறாய்க் கிடந்தோம்.
ஆயினும் என்னே நிமிர்விருந்தது எம்மில்.
எத்திசையும் அரணிடப்பட்ட வேலிக்குள்
எமக்கொரு இராஜாங்கம் இருந்தது.
தலையில் முடிதரித்து இலங்கினோம்.
இன்று திசைகளைத் திறந்து வெளியேறி
தடையற்று உலவுறோம்.
ஆயினும் எம்மிலிருந்த அழகையிழந்தோம்.
எவருக்கும் குனியாத தலையும்
எதுவரினும் பணியாத நிலையுமாக
சூரியனைத் தொட்டளையும் உயரமாய் நின்றோம்.
காணும் விழிகூசும் கோடிப் பிரகாசமாய்
ஜொலித்தோம் அல்லவா நாம்.
பகைவனின் குருதியைக் காபவைத்து
பொடியாக்கிப் பொட்டிட்டோம்.
களத்தில் எம்தேர் நகரும் திசையாவும்
கேட்டது கானமய நாணொலி.
வெற்றிச்சங்கம் ஊதுமின் என்று
போர்முனையிருந்தெம் வீரர் முழங்கினர்.
இன்று முடிவடையாப் பயணவழியில்
ஒரு முச்சந்தியில் நிற்கிறோம்.
எங்கிருந்து தொடங்கினோம் இப்பயணம்?
பயணவழியில் கடந்த பாலைவனங்கள் எத்தனை?
நெருப்பாறுகள் எத்தனை?
ஒருமிடறு தண்ணீருக்கு தவித்தவரல்லவா நாம்?
வழிநடந்தபோது எம் சகபயணிகள்
உயிர் துறந்தார்.
கலக்மேதுமற்று வறுகிப்புதைத்து
நடந்தோம் வழி.
வேலியிடப்பட்ட சிறு புலவுக்குள்
நாமே உடைத்துத் திறந்தோம் கதவு
இன்று காற்று வருகிறது.
வேர்த்துக் கிடந்தவர்மேல் வெளிச்சம் படர்கிறது.
நேற்று நடந்ததை இன்று மறந்து
இன்று நடப்பதை நாளை மறந்து
பழையன மறந்து படுப்போமானால்
வாசலில் நாம்மட்டுமே மிஞ்சுவோம்.
வரலாறு எம்மை எறிந்துவிட்டுப் போய்விடும்.
காலாறக் கொஞ்சம் தரித்துளோம் என்று
இனியும் கதைவிட முடியாது.
காலாற நெடுநாள் காத்திருப்போமானால்
விடுதலைப்போரின் சூடாறிவிடும்.
சுழிமாறி சூழ்நிலையின் கைதியென
மாரீசப்பேயின் வாய்விழவேண்டி வரும்.
கிளைவழியற்ற தனிவழி நடந்தபோது
எம் காலடியில் நெருப்புக் கனன்றது.
இன்று கிளைவழிகள் எதிர்கொள்ளும்போது
மனம் தள்ளாடி மயங்கப்பார்க்கிறது.
விடுதலைக்காக விரிந்த வெளியில்
பெருநெருப்பின் பொறியெனக்கிடவாய் தமிழா
ஊதும்போதில் மூழும்படியாய்.
'தனியரசு'சென்றான் அடங்காத் தமிழன்.
'ஐம்பதுக்கம்பது' என்றான் தனிப்பெருந்தலைவன்.
'இணைப்பாட்சி' என்றார் ஈழத்தின்தந்தை.
'மாவட்டசபை' என்று இரங்கினான் தளபதி.
'மாகாணசபை' என்றான் ஒரிசாவுக்கு ஓடிய
பெருமாள்.
அவர்கள் போட்ட தாளத்துக்கெல்லாம்
நீ ஆடிக்களைத்தாய்.
நீண்ட காலத்தின் பின்னே நீ நிமிர்ந்தாய்.
நாயாய்க் கிடந்த வாழ்வுதறி
புயலின் வலியனாய் புகுந்தாய் களத்தில்.
ஈழத்தமிழனாலும் இயலுமெனச் சொல்லி
உலகம் உன்னைப் பாடிற்று.
எவரெவரோ காலில் மிதிபடக் கிடந்தவனே
உன்னை மேல்நோக்கி எழச்செய்தான்
எம் தலைவன்.
பிரபாகரன் காலமெனும் ஒரு சகாப்தம் படைத்து
நீ போராடத் தொடங்கி
உன்னில் ஒளிபூசிக்கொண்டு இலங்கினாய்.
இன்று என்னடா நடந்தது உனக்கு?
சின்னத்திரையிலும்,
சீமைப்பொருளிலும்,
கண்ணைப் பறிக்கும் மின்சாரஒளியிலும்
கரைந்துவிடப் பார்க்கிறாயே.
இன்னும் இருக்கிறது மீதிப் பயணம்
இனியும் இருக்கிறது விடுதலைக்கான வழி.
காலமொன்றுக்காகக் காத்திருப்பது குற்றமல்ல.
நீ காத்திருப்பதாகத் தெரியவில்லையே
கரைந்தல்லவா போகிறாய்.
பூத்தபடி இருப்பாயென நம்பினால்
நீ வேரையே அறுத்தபடி விழுகின்றாயே.
மற்றவர்களுக்கு உபதேசிக்க முன்னர்
நீயே உதாரணமாய் இரு.
தேவநதிகளில் நீராடப்பழக்கப்பட்டவனே
மாடுகள் குளிப்பாட்டும் குளத்தில்
நீயேனடா நீச்சலடிக்க விரும்புகிறாய்.
கூவிவரும் எறிகணையை,
குண்டுவீசும் வல்லூறை,
புதைத்துவைத்த கண்ணிவெடியை,
சுற்றிவளைப்பை,
சித்திரவதையை,
ஊர்விட்டுக் கலைக்கப்பட்ட இடப்பெயர்வை,
நிவாரண வரிசையை
மறந்துபோய் ஆடுகிறாய் மகுடிக்கு.
வேண்டாமடா இந்த விளையாட்டு.
எதுவும் எமக்கு புதியதல்ல
இடிந்து போவதற்கு.
நம்பிக்கையின் குரல்வளையைத் திருகியது
இதுதான் முதற்தடவையுமல்ல.
உழுதுவிட்டு மழைக்காகக் காத்திருப்பதும்
அவர்கள் விதைநெல்லை
பறித்துக்கொண்டோடுவதும்
எமக்குப் பழக்கப்பட்ட வழமையல்லவா?
நீச்சலடிக்க வேண்டுமானால் ஆற்றிலிறங்கு
கரையில் நின்றபடி கணக்குப் பார்க்காதே.
முடிக்க வேண்டுமானால் நடக்கத் தொடங்கு
முடியுமா என்று கலங்கிவிடாதே.
நடக்கும் வழியில் சேறும் சகதியும் வரும்
விலத்தி நடந்தால் வில்லங்கமில்லை.
இடையிடையே மழைவரும்
குடைவிரித்துக் கொள்.
புயல்வரும்
கொஞ்சம் ஒதுங்கிநில்.
நடை தளரும்போது இளைப்பாறு
எந்த நிலையிலும் பயணத்தை நிறுத்தாதே.
விடுதலையை வெறும் தரப்போவதில்லை
அது எடுக்க வேண்டியது.
சுதந்திரத்துக்கான வழி சுலபமானதல்ல
நீண்ட பயணம்.
தலைமுறை பலவாகி நடக்க வேண்டும்.
இன்றும் எமது இலக்கு 'தமிழீழம்'தான்.
இனியும்தான்.
என்றும்தான்.



www.eelamview.com